Registered as a magazine in Sri Lanka

# நிமிர்வு

ISSN 2579-2113

அரசியல் சமூக பொருளாதார செயற்பாட்டிதழ்

facebook.com/nimirvu youtube.com/nimirvu www.nimirvu.org

பார்வை-63 சித்திரை,2023 பக்கங்கள்-24 விலை - ரூபா 20.00

## தமிழர் தாயகத்தில் பல முனைகளில் விரிவுபடுத்தப்படும் பௌத்தமயமாக்கல்



- அதானி குழுமத்துக்கு எதிரான பழங்குடி மக்களின் போராட்டம்
- உன்னதமான நீர் முகாமைத்துவத்தை கைக்கொண்ட எமது முன்னோர்கள்
- கிழக்கின் பெண்களின் வறுமையும் வெளிநாட்டு வேலைவாய்ப்பின் திறந்த கதவும்

ஆய்வு – அறிவு – நிமிர்வு

# உன்னதமான நீர் முகாமைத்துவத்தை கைக்கொண்ட எமது முன்னோர்கள்

■ ச.சர்வராஜா



தொகுப்பு - செ. ரவிசாந்

உலக நீர் தின நிகழ்வு 2023 பங்குனி 22 ஆம் திகதி கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்ட வட மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நீர்ப்பாசனப் பொறியியலாளர் ச.சர்வராஜா 'யாழ்ப்பாணத்தில் தண்ணீர் நெருக்கடியை வெற்றி கொள்வது எப்படி?' எனும் தொனிப் பொருளில் சிறப்புரை ஆற்றினார்.

அவர் முக்கியமாக தெரிவிக்கையில், எங்களுடைய வாழ்விற்குப் பிரதான ஆதாரமாக உள்ள நிலத்தடி நீரை எங்கள் முன்னோர்கள் பொக்கிஷமாக கருதினர். நீரைச் சேமிப்பது, அதனை உரிய வகையில் பயன்படுத்துவது, நீரை மாசடையாமல் பாதுகாப்பது இவை மூன்றும் தான் நிலத்தடி நீர் முகாமைத்துவத்தின் மூன்று அடிப்படை விதிகள். ஓர் ஊரில் மழை பெய்தால் எந்தப் பகுதியை நோக்கி மழைநீர் அதிகளவில் ஓடிவருமோ அந்த இடத்தில் எமது முன்னோர்கள் குளத்தை அமைத்தார்கள். அந்தக் குளத்திற்குள் நிற்கும் நீர் தூய்மையாக நிலத்திற்குக் கீழே செல்வதற்கு வசதியாகவும், ஆவி ஆவதைக் குறைக்கும் வகையிலும் குளங்களைச் சுற்றி மருது, நெல்லி, நாவல் போன்ற மரங்களை நடுகை செய்தார்கள். குளங்களை யாரும் மாசுபடுத்தி விடக் கூடாது என்பதற்காக குள மரத்தடியில் பிள்ளையார் அல்லது அம்மன், முருகன் சிலையை வைத்தார்கள். ஏதாவது தப்புச் செய்தால் 'கடவுள் கண்ணைக் குத்தும்' எனவும் சொன்னார்கள். இதனால், குளத்து நீர் மாசடையாது பாதுகாக்கப்பட்டது.

குளம், குளத்திற்கு அருகில் மரம், மரத்தடியில் சிறிய கோயில். கோயிலுக்குப் பக்கத்தில் கிணறு இருந்தது. அந்தக் கிணறு தூய்மையாகவும், குளிர்மையாகவும், மருத்துவ குணங்கள் கொண்டதாகவும் அமைந்திருந்தது. அந்தக் கிணற்றிலிருந்து தான் ஊர் மக்கள் பெரும்பாலானவர்கள் நீர் பெற்றுக் கொண்டனர். இன்றும் சில கோயில்களின் கிணற்று நீரை நாம் அள்ளிப் பருகும் போது குளிர்மையையும், மருத்துவ குணங்களையும் எம்மால் உணர முடிகின்றது என்றால் அதற்குப் பழமையே காரணம்.

கோயில்களை விடக் கோயில் குளங்களே முக்கியமானவை என்பதை உணர்ந்து கொண்ட எமது முன்னோர்கள் அதனை உரிய வகையில் பேணினார்கள். முன்னைய காலத்தில் குளத்தைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக குளத்தின் அருகில் தெய்வ விக்கிரகத்தை வைத்தார்கள். ஆனால் இன்றோ, பிள்ளையாருக்கு அர்த்த மண்டபம் வேண்டும் என்பதற்காகப் பாதிக் குளத்தையும், அம்மனுக்கு மகா மண்டபம் வேண்டும் என்பதற்காக மீதிக் குளத்தையும் மூடினோம். இவ்வாறு மூடி மூடியே பல குளங்கள் காணாமற் போய்விட்டன.

முற்காலத்தில் வீடுகளில் வரம்பு கட்டி மழைநீரைச் சேகரித்தனர். இன்று இந்த நிலை இல்லை. தற்போது வீடுகளைச் சுற்றி திண்கரைத் தரைகள் போட்டுள்ளதுடன் கருங்காரை வீதிகளும் அமைத்துள்ளனர். இதுபோன்ற செயற்பாடுகளால் மழைநீர் நிலத்திற்குக் கீழ் செல்லும் அனைத்து வழிகளையும் பெரும்பாலும் மூடி விட்டோம். அதேவேளை தினந்தோறும் பயன்படுத்தும் நிலத்தடி நீரின் அளவையும் நாங்கள் அதிகரித்து விட்டோம். பல செயற்பாடுகளாலும் நீர் மாசடையும் சூழலையும் நாங்கள் ஏற்படுத்தி விட்டோம். இது மிகப் பெரிய ஆபத்தான விடயம்.

எங்களுடைய நாடு 103 ஆற்றுப்படுக்கைகளைக் கொண்டுள்ளது. வடமாகாணத்தில் 24 ஆற்றுப்படுக்கைகள் இருந்தன. எனவே, நீரைப் பொறுத்தவரை நாங்கள் வரம் தான் பெற்றிருக்கின்றோம். யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை ஓர் ஆறும் இல்லை என்பது

ஒரு அபாக்கியமான நிலை. நாங்கள் தொண்டைமானாறு என்கின்றோம், வழுக்கையாறு என்கின்றோம், உப்பாறு என்று சொல்கின்றோம், பின்னர் ஏன் ஆறு இல்லை என்று சொல்கிறீர்கள் என்று நீங்கள் கேட்கலாம்.

ஆறில்லா ஊரிற்கு அழகு பாழ் என்று ஔவையார் கூறியுள்ளார். இதனால் தான் நாங்கள் ஆறு என்ற பெயருடன் சேர்த்துச் சில பெயர்கள் வைத்திருக்கின்றோம். 'யாழ் மாதா தன்னை யாரும் மலடி என்று சொல்லிவிடக் கூடாது என்பதற்காக சத்திரசிகிச்சை பெற்று எடுத்த பிள்ளை தான் வழுக்கையாறு' என எழுத்தாளர் செங்கை ஆழியான் தனது நூலொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை மிகப் பெரிய குளங்களை அமைப்பதற்கான வாய்ப்புக்கள் இல்லை. நடுத்தரக் குளங்களை அமைப்பதற்கான வாய்ப்புக்களும் இல்லை. ஒரு வாசலை மூடினாலும் மற்றைய வாசலைக் கடவுள் எங்களுக்காகத் திறந்தே வைத்துள்ளார். நிலத்திற்குக் கீழ் தேவையான நீர் உள்ளது. நிலத்தடி நீர் தான் யாழ்ப்பாணத்தின் மிகப் பெரிய வரம். வரமாக விளங்கிய நீர் வளத்தை மனித நடவடிக்கைகளால் நாங்கள் மாசாக்கி சாபமாக மாற்றி விட்டோம்.

யாழ்ப்பாணம் ஆறில்லாத மாவட்டமாக காணப்பட்டாலும் வருடாந்தம் 1300 மில்லியன் கனமீற்றர் நீர் கிடைக்கிறது. எங்களின் குடிநீர்த் தேவைக்காக 20 மில்லியன் கனமீற்றர் போதுமானது. கடவுள் இவ்வளவு நீர் தந்தும் அதிலிருந்து குடிநீர்த் தேவைக்கான நீரை நாம் உரிய வகையில் பெற்றுக் கொள்ள முடியவில்லையே என்றால் அது எத்தனையோ கல்விமான்களையும், அறிவு ஜீவிகளையும் கொண்ட யாழ்.மாவட்ட மக்களின் இயலாமையின் விளைவையே வெளிப்படுத்துகின்றது.

யாழ். மாவட்டத்தில் நகரப் பகுதிகளில் மலக் கழிவுகளாலும், பல பகுதிகளில் விவசாய நடவடிக்கைக்குப் பயன்படுத்தப்படும் உரங்கள், கிருமிநாசினிகளாலும் நீர் மாசடைந்துள்ளது. சுன்னாகத்தில் கழிவு எண்ணையால் நீர் மாசு, கடற்கரையை அண்டிய பிரதேசங்களில் உவர் நீரால் நீர் மாசு எனப் பல வழிகளாலும் நீர் மாசுபடுத்தப்பட்டு விட்டது.

நீர் பொய்த்துப் போனால் இந்த உலகத்தில் அத்தனை அசைவுகளும் நின்று போய்விடும் எனத் திருவள்ளுவர் அன்றே சொல்லிவிட்டார். இன்றைய விஞ்ஞான வளர்ச்சி எத்தனையோ புதிய விடயங்களைக் கண்டுபிடித்து விட்டது. எத்தனையோ பொருட்களுக்கு மாற்றீடான பொருட்களும் கண்டுபிடித்தாகி விட்டது. ஆனாலும், நீருக்கு மாற்றீடாக இதுவரை எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை. இனியும் கண்டுபிடிக்க முடியாது.

மிக மோசமான நீரைப் பருகுகின்ற எத்தனையோ சமுதாயத்தினர் வெளிநாடுகளில் காணப்படுகின்றனர். சில நாடுகளில் ஒரு இடத்தில் மாத்திரம் தான் நீர் உள்ளது. அதனைப் பெற்றுக் கொள்வதற்கு எத்தனையோ பேர் குவிகிறார்கள். இவ்வாறான அபாயகரமான நிலைமை எம்மை நோக்கியும் வரும் என்ற சாத்தியம் இருக்கிறது என்பதை நாங்கள் ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

எதிர்காலத்தில் தங்கம் கொடுத்து நீர் வாங்க வேண்டிய சூழல் கூட ஏற்படலாம் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது. நாங்கள் முன்னர் நிவாரணத்திற்காக, பாணுக்காக நீண்ட வரிசையில் காத்திருந்தோம். அண்மையில் பெற்றோலுக்காக நீண்ட வரிசையில் காத்திருந்தோம். எதிர்காலத்தில் நீருக்காகவும் நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டிய சூழல் ஏற்படும் எனச் சொல்கிறார்கள்.

ஆளில்லா வீட்டிற்குள் அரைக் குவளை நீர் திருடினான் என்பதற்காக ஆயுள் தண்டனை விதிக்கப்படும் நிலைமை கூட எதிர்காலத்தில் உருவாகலாம். நீரின் பெறுமதி எதிர்காலத்தில் நிச்சயம் உச்சத்தைத் தொடும் என்பதை நாங்கள் இன்றே உணர்ந்து கொள்ள வேண்டும்.

20 ஆம் நூற்றாண்டைப் பெற்றோலியம் தீர்மானிக்கும் என்று கூறினார்கள். அவ்வாறு தான் அமைந்தது. 21 ஆம் நூற்றாண்டை நீர் தான் தீர்மானிக்கும் என்று சொல்கிறார்கள். உலகிற்கே உணவளிக்கக் கூடிய வளம், ஆற்றல், வாய்ப்பு அனைத்தும் இலங்கையில் உள்ளன. அதனைச் சரிவரப் பயன்படுத்தினால் நாங்கள் நிச்சயம் உயர்நிலையை அடையலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

தமிழ் ஊடகத் திரட்டு,
லக்சுமி கட்டிடம்,
ஞானபாஸ்கரோதய சனசமூக நிலைய வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

நிமிர்வு

மின்னஞ்சல்: nimirvueditor@gmail.com
இணையம்: www.nimirvu.org
தொலைபேசி இல: 0212232121

## ஆசிரியர் பார்வை

# சிறீலங்கா அரசின் பண்பாட்டு அழிப்புக்கு எதிராக தாயகமும் புலமும் திரண்டெழுந்து போராட வேண்டும்

சிறீலங்கா அரசாங்கம் பண்பாட்டு யுத்தம் ஒன்றை தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டிருக்கிறது. சர்வதேச நாடுகளுக்கு தமிழ் மக்களுக்கு எல்லா உரிமைகளையும் வழங்கி விட்டதாக பிரமையை ஏற்படுத்தும் ரணில் தலைமையிலான சிறீலங்கா அரசாங்கம் தமிழர் தாயகத்தின் பல முனைகளிலும் பரவலாக பௌத்தமயமாக்கும் செயற்திட்டத்தை முடக்கி விட்டுள்ளது.

இத்தனைக்கும் கடன் சுமையில் தவித்து IMF போன்ற நிறுவனங்களின் காலடியில் விழுந்து கிடக்கும் சிங்கள பேரினவாத அரசு தமிழர் பகுதியில் ஆக்கிரமிப்புக்களை மட்டும் திட்டமிட்டு முன்னெடுத்து வருகின்றது. தமிழரின் அரசியல் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். இனப்படுகொலைக்கு நீதி வேண்டும். தமிழ் மக்களின் பிரதான கோரிக்கைகளான இவற்றை கேட்டு நிற்கும் தமிழினத்தின் போராட்ட ஒருங்கிணைவை சிதறடிக்கும் வகையில் தான் மேற்படி கவனச் சிதறடிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றதா என்கிற சந்தேகம் எம் மக்களிடம் உண்டு.

தமிழர் தாயகத்தில் ஆங்காங்கே ஆக்கிரமிக்கப்படும் நிலங்களை நோக்கி தமிழ் மக்களின் கவனம் சிதறடிக்கப்படும் போது பேரினவாதம் பிரதான கோரிக்கைகளில் இருந்து தமிழ் மக்களை தள்ளி வைக்கும் நிலை உள்ளது. இதனால் தமிழ்மக்களின் அடிப்படை உரிமைகளுக்கான கோரிக்கைகள் பின்தள்ளப்படும் பின் காணாமல் ஆக்கப்படும் அபாயமும் உண்டு.

அதேவேளை இவ்வாறான ஆக்கிரமிப்புகள் எமது தேசத்தின் விடுதலைக்காக மக்களை அணிதிரட்டுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குகின்றன. சரியான வேலைத்திட்டம் ஒன்றை தமிழ் சமூகம் அமைத்துக் கொள்ளுமாயின் இந்த ஆக்கிரமிப்புகளுக்கு எதிரான போராட்டங்கள் ஊடாக மக்களை ஓரணியில் திரட்டுவது சாத்தியம்.

எமது நிலங்களின் அபகரிப்புக்கு எதிராக பொதுமக்கள், தமிழ்க் கட்சிகள், வெகுசன அமைப்புகள் இணைந்து வலுவான போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும். இந்த ஒருங்கிணைவில் தமிழ் மக்கள் கூடியளவு திரட்சியாக பங்கேற்க வேண்டும்.

ஏனெனில் தங்களது பண்பாடு, கலாசார அழிப்புக்கு எதிராக கூட போராடாத இனத்தின் எதிர்காலம் எவ்வாறு அமையும்? தமிழர்களின் மரபுரிமைகளை பாதுகாப்பதற்கான தொடர்ச்சியான போராட்ட முன்னெடுப்புகளை முன்னெடுப்பதற்கான வேலைத்திட்டங்களே இன்று அவசியமாக உள்ளன. அதற்கான ஆரம்பக் கட்ட நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டு போராட்டம், ஹர்த்தால் என்று பல்வேறு போராட்ட வடிவங்களை முன்னெடுக்க முயற்சித்தாலும், எதற்கும் ஒரு தொடர்ச்சியான வலுவான திட்டமிடலுடன் கூடிய பொறிமுறைகளே தேவையாக உள்ளன.

தாயகத்தில் இடம்பெறும் போராட்டங்கள் படிப்படியாக சர்வதேச நாடுகளை நோக்கியும் நகர வேண்டும். இதற்கான போராட்டங்களை தாயகத்தில் முன்னெடுக்கும் போது சமநேரத்தில் புலம்பெயர் தேசங்களிலும் நடாத்தப்படுவது முக்கியமானது. பேரினவாதிகளின் அபாயமான தந்திரங்களுக்கு பலியாகாமல் தமிழினம் விழிப்போடு செயற்பட்டு ஆக்கிரமிப்புகளை எதிர் கொள்ள வேண்டும். ஆக்கிரமிப்புகள் தடுத்து நிறுத்தப்படும் வரை போராட்டங்களை தொடர வேண்டும்.

அட்டைப்படம்: துருவன்

-செ. கிரிசாந்-

# தென்சூடான் பொதுவாக்கெடுப்பு

## தமிழ் மக்கள் கோரும் பொதுவாக்கெடுப்பு - பகுதி 2



தொகுப்பு - லிங்கம்

2011 ஆம் ஆண்டு தை 15 ஆம் திகதி தென்சூடானில் ஒரு பொதுவாக்கெடுப்பு நடத்தி முடிக்கப்பட்டது. அதாவது, தென் சூடான் மக்கள் சூடான் நாட்டுடன் இணைந்து வாழ விரும்புகிறார்களா அல்லது பிரிந்து போய் சுதந்திரமான தனிநாடு ஒன்றில் வாழ விரும்புகிறார்களா என்பதே அந்த பொது வாக்கெடுப்பில் கேட்கப்பட்ட கேள்வி.

சூடான் மக்கள் விடுதலை இயக்கம் (Sudanese People's Liberation Movement, SPLM) மற்றும் சூடான் அரசாங்கத்துக்கும் இடையே ஏற்பட்ட உடன்படிக்கையினாலேயே இந்தப் பொதுவாக்கெடுப்பு சாத்தியமானது. ஏறத்தாழ மூன்று வருடங்களாக நடந்த பேச்சுவார்த்தையின் பின்னர் 2005 ஆம் ஆண்டு தை மாதம் 9 ஆம் திகதி கைச் சாத்திடப்பட்ட இந்த உடன்படிக்கை நைவாசா உடன்படிக்கை (Naivasha agreement) என்று அழைக்கப்பட்டது. இந்த உடன் படிக்கையின் முக்கியமான விடயம், அது தென் சூடான் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தது என்பதே. அதனூடாக அம்மக்கள் தங்களின் எதிர்காலத்தை ஒரு பொதுவாக்கெடுப்பின் ஊடாக தீர்மானிப்பதற்கு அது வழி வகுத்தது.

மேலும், பொதுவாக்கெடுப்புக்கு முன்னர் பின்வரும் முக்கிய நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட வேண்டும் என்று நைவாசா உடன்படிக்கை சொல்லியது:

1. பொதுவாக்கெடுப்பு நடத்தப்படும் வரை இடைக்கால தேசிய ஒருமைப்பாட்டு அர சாங்கம் ஒன்று அமைக்கப்பட வேண்டும்.

2. இந்த அரசாங்கத்தில் மூன்றில் ஒரு பகுதி பல்வேறு பாதிப்புகளுக்கும் ஆளாகிய தென்சூடான் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

3. நாடு தழுவிய ஒரு மக்கட்தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். அதனூ டாக அந்த பொதுவாக்கெடுப்பில் வாக்களிக்க தகுதியான தென்சூடானிய மக்கள் யார், நாட்டின் வளங்களும் அதன் கடன்களும் எவ்வாறு பங்கிடப்பட வேண்டும் என்பவை தீர்மானிக்கப்பட வேண்டும்.

தென்சூடானின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம் நீண்ட சரித்திரத்தைக் கொண்டது. ஆங்கிலேய-எகிப்திய ஆதிக்கத்திடமிருந்து 1956 ஆம் ஆண்டு சூடான் விடுதலை அடைந்தது. இதற்கு முன்னராக 1953 ஆம் ஆண்டு பிரித் தானியாவுக்கும் எகிப்துக்கும் இடையில் ஏற்பட்ட உடன்படிக்கை ஊடாக சூடானில் ஒரு சுயாட்சி அரசாங்கம் அமைக்கப்பட்டது. அந்த

அரசாங்கம் அமைக்கப்பட்ட காலத்திலிருந்தே சமஸ்டிக்கான கோரிக்கைகள் ஆரம்பித்து விட்டன. விடுதலையடையப் போகும் சூடானில் சமஸ்டி அரசாங்கம் அமைக்கப்படாவிட்டால் தென்சூடானுக்கு பிரிந்து போகும் உரிமையை உள்ளடக்கிய சுயாட்சி வழங்கப்பட வேண்டும் என்று தென்சூடானைச் சேர்ந்த தலைவர்கள் நம்பினார்கள்.

சமஸ்டிக்கான கோரிக்கை பிரிந்து போவதற்கான முயற்சி என்று சொல்லி பெரும் பாலும் வடசூடான் பிரதிநிதிகளைக் கொண்ட பாராளுமன்றம் அதனை நிராகரித்தது. இதன் காரணமாக எழுந்த போராட்டத்திற்கு தென் சூடான் விடுதலை இயக்கம் (South Sudan Liberation Movement, SSLM) தலைமை வகித் தது. 1955 இலிருந்து நடந்த இந்தப் போராட்டம் 1972 மாசி மாதம் அடிஸ் அபாபாவில் ஏற்பட்ட உடன்படிக்கை ஊடாக முடிவுக்கு வந்தது. இந்த உடன்படிக்கையின்படி Bahr-el-Ghazal, Equatoria, Upper Nile ஆகிய மாகாணங்களை உள்ளிட்ட தென்சூடான் பிரதேசத்துக்கு சுயாட்சி வழங்கப்பட்டது. சூடானின் அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்ட இந்த உடன்படிக்கை 1983 ஆம் ஆண்டு ஆட்சியில் இருந்த சனாதிபதியால் நிராகரிக்கப்பட்டது.

சனாதிபதியின் இந்த நடவடிக்கைக்கு எதிராக ஓர் இராணுவக் கிளர்ச்சி வெடித்தது. அதன் விளைவாக சூடான் மக்கள் விடுதலை இயக்கம் (SPLM) என்ற ஓர் அமைப்பு உரு வாகியது. அது தென்சூடானின் விடுதலைக்காக மட்டுமல்லாமல் நாடு முழுவதற்கும் ஒரு சமஸ்டி அமைப்பு வேண்டுமென்றும் இனவாதம் (racism) மற்றும் பழங்குடிமைவாதம் (tribalism) நீக்கப்பட வேண்டும் என்றும் போராடியது. அதேவேளை SPLM இலிருந்து பிரிந்த தென்சூடான் சுதந்திர இயக்கம் (South Sudan Independent Movement, SSIM) போன்ற தென்பகுதி ஆயுதப் போராட்ட இயக்கங்கள் தென்சூடான் மக்களின் சுயநிர்ணய உரிமைக்காக போரா டினார்கள். இப்போராட்டங்களின் ஊடாக 2005 இல் எட்டப்பட்ட நைவாசா உடன்படிக்கை தென்சூடானின் சுயநிர்ணய உரிமையை மையக் கருவாக கொண்டிருந்தது. அதனை நடை முறைப்படுத்தும் ஓர் அங்கமாக தென்சூடானில் நடந்த பொதுவாக்கெடுப்பு அமைந்தது.

இந்த வாக்கெடுப்புக்கு பல சவால்கள் இருந்தன. முதலாவது ஒரு இடைக்கால தேசிய அரசாங்கமும் அதற்கான ஓர் அரசியல் அமைப்பும் உருவாக்கப்பட வேண்டி இருந்தது. தென்சூடான் பொதுவாக்கெடுப்புக்குத் தேவையான சட்ட மூலங்கள் மற்றும் கால அட்டவணைகள் அந்த அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட வேண்டி இருந்தது. அதன்படி உருவாக்கப்பட்ட அரசியலமைப்பில் சொல்லப்பட்டவாறு தென் சூடான் பொதுவாக்கெடுப்பு ஆணைக்குழு (Southern Sudan Referendum Commission, SSRC) என்ற ஒரு சுயாதீன ஆணைக்குழு 2010 ஆம் ஆண்டு ஆனி மாதத்தில் உரு வாக்கப்பட்டது. இந்த ஆணைக்குழு பொது வாக்கெடுப்பை நடத்துவதற்கு பொறுப்பாக இருந்தது. இக்குழுவில் வடக்கைச் சேர்ந்த நால்வரும் தெற்கைச் சேர்ந்த ஐவரும் அங்கம் வகித்தார்கள். இடைக்கால அரசாங்கம் மற்றும் வெளிநாட்டு அலுவலகங்கள் என்பவற்றுக்கும் ஆணைக்குழுவுக்கும் இடையில் ஒரு பால மாக செயற்பட தென்சூடான் செயலணி (taskforce) ஒன்றும் உருவாக்கப்பட்டது. பொது வாக்கெடுப்பை நிர்வகித்தல் மற்றும் அது தொடர்பான விழிப்பூட்டல்களை உருவாக்குதல் இந்த செயலணியின் கடமைகளாக இருந்தன.

பொதுவாக்கெடுப்பை நடத்துவதில் SSRC பல சவால்களை சந்தித்தது. பொது வாக்கெடுப்பில் கலந்து கொள்ள தகுதி உடையவர்கள் யார் என்பதை தீர்மானிப்பது அவற்றில் முக்கியமான ஒன்றாக இருந்தது. நைவாசா உடன்படிக்கையில் கேட்கப்பட்டவாறு ஒரு சனத்தொகை கணக்கெடுப்பு இடைக்கால அரசாங்கத்தால் 2008 ஆம் ஆண்டில் நடத்தப் பட்டது. சூடானின் புவியியல் தன்மைகள், அங்கு வாழ்ந்த பல மக்கட் கூட்டங்களின் நாடோடி வாழ்க்கை முறை, தொழில்நுட்ப பற்றாக்குறை, தகுதியான பணியாளர்கள் இன்மை போன்ற காரணங்களால் அந்த சனத்தொகை கணக்கெடுப்பு பல குறைபாடு களை கொண்டிருந்தது. அதேவேளை தென் சூடானிலிருந்து புலம்பெயர்ந்து வாழ்ந்து




கொண்டிருந்த மக்களின் எண்ணிக்கை தொடர்பாகவும் முழுதான தகவல்கள் இருக்கவில்லை.

2008 ஆம் ஆண்டு சனத்தொகை கணக்கெடுப்பை வைத்துக் கொண்டு தென் சூடானில் அமைக்கப்படவிருக்கும் எந்த வாக்களிப்பு நிலையத்திலும் வாக்களிக்கக் கூடிய மக்கள் யார் என முடிவு செய்ய வேண்டி இருந்தது. அதே போன்று சூடானின் ஏனைய பகுதிகளில் வசித்த தென்சூடானிய மக்கள் எந்த இடங்களில் வாக்களிக்க வேண்டும் என்று முடிவு செய்ய வேண்டி இருந்தது. மேலும் இடைக்கால அரசியலமைப்பு அவுஸ்திரேலியா, கனடா, எகிப்து, எதியோப்பியா, கென்யா, உகண்டா, ஐக்கிய இராச்சியம் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளில் பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று சொல்லியது. அந்த நாடுகளில் எங்கு வாக்குச்சாவடிகளை அமைக்க வேண்டும் என்று முடிவு செய்ய வேண்டி இருந்தது.

இந்த வாக்கெடுப்பில் கலந்து கொள்ள தகுதியானவர் என்று இடைக்கால அரசியலமைப்பில் பின்வருமாறு நிறுவப்பட்டிருந்தது:

1. 1956 தை மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் தென்சூடானில் வசித்த பழங்குடி மக்களின் வழித்தோன்றல்கள் அல்லது அந்த திகதிக்கு பிற்பாடு தென்சூடானில் தொடர்ந்து வசிப்பவர்கள் அல்லது அவ்வாறு வசிக்கும் பெற்றோருக்கு பிறந்தவர்கள்

2. 18 வயதை அடைந்தவர்கள்

3. சுயபுத்தியுடன் இருப்பவர்கள்

4. பொதுவாக்கெடுப்பு வாக்காளர் அட்டவணையில் பதிவு செய்தவர்கள்

2010 ஆம் ஆண்டு ஆனி மாதம் உருவாக்கப்பட்ட SSRC 2011 ஆம் ஆண்டு தை மாதத்துக்குள் ஒரு பொதுவாக்கெடுப்பை நடத்த வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இந்தக் குறுகிய கால அட்டவணை SSRC எதிர்நோக்கிய இன்னுமொரு சவாலாக இருந்தது. முன்னர் கூறப்பட்ட பல சவால்களை கொண்டுள்ள ஒரு நாட்டில் இந்தக் குறுகிய கால எல்லைக்குள் வாக்காளர் அட்டவணையில் தகுதியானவர்களை பதிவு செய்து ஒரு பொதுவாக்கெடுப்பை நடத்துவது என்பது இமயத்தில் ஏறுவதற்கு ஒப்பானது.

மேலும், வாக்காளர் அட்டவணையை தயாரிக்கும் பொழுது மேற்குறிப்பிட்ட தரவுகளுக்கு இணங்க ஒருவரை அடையாளம் கண்டு அவர்களை அட்டவணையில் சேர்ப்பது பெரும் சவாலாக இருந்தது. அப்படிச் சேர்க்கப்பட்ட பல நபர்களின் தகுதி குறித்து பல கேள்விகள் எழுப்பப்பட்டன. அவற்றுக்கு பதிலளிப்பதிலும் தகவல்களை சரி பார்ப்பதிலும் பெருமளவு நேரமும் முயற்சியும் விரயமாக்கப்பட்டன.

வெளிநாடுகளில் நடத்தப்படவிருந்த பொதுவாக்கெடுப்பை சர்வதேச இடப்பெயர்வுக்கான நிறுவனம் (International Organization for Migration, IOM) செய்ய வேண்டும் என்று இடைக்கால அரசியலமைப்பு சொன்னது. ஆனால், இந்த சட்டம் இயற்றப்படும் பொழுது இது தொடர்பாக IOM இற்கு அறிவிக்கப்படவில்லை. மேலும் இவ்வாறான வாக்கெடுப்பை நடத்துவதற்கான கொள்ளளவு IOM இற்கு இருக்கிறதா என்பதையும் சட்டமியற்றியவர்கள் அறிந்திருக்கவில்லை.

பொதுவாக்கெடுப்பு அலுவல்களில் ஈடுபடத் தகுதியான ஆளணிகளை திரட்டுவது SSRC இற்கு அடுத்த சவாலாக இருந்தது. பொதுவாக்கெடுப்புச் சட்டம் இந்த ஆளணியில் இருப்பவர்கள் 40 வயதிற்கு மேற்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்று சொல்லியது. ஆனால், தென்சூடானில் இருந்த 40 வயதுக்கு மேற்பட்டவர்களில் பெரும்பான்மையானோர் படிப்பறிவு இல்லாதவர்களாக இருந்தார்கள்.

வாக்காளர் அட்டவணை தயாரித்து, அதனை பரிசோதனை செய்து, பொதுவாக்கெடுப்புக்கான பிரச்சாரத்துக்கு நேரம்

கொடுத்து, எல்லாம் அரசியலமைப்புக்கு அமைவாக நடக்கிறதா என்று மேற்பார்வை செய்து, வாக்குச் சாவடிகள் தொடர்பான கடைசி நேர மாற்றங்களை செய்து பின்னர் பொதுவாக்கெடுப்பை நடத்த SSRC இற்கு கிடைத்தது 4 மாதங்களே.

அமெரிக்க முன்னாள் சனாதிபதி ஜிம்மி காட்டர், ஐ.நா. முன்னாள் செயலாளர் கோபி அனான், முன்னாள் தன்சானிய பிரதமர் ஜோசப் வரியோபா ஆகியோர் தலைமையிலான சர்வதேச கண்காணிப்புக்குழு பொது வாக்கெடுப்பை கண்காணிக்கும் வேலையை செய்தது. ஆபிரிக்க ஒன்றியம், ஐரோப்பிய ஒன்றியம், அரபு நாடுகளின் கூட்டு, நாடுகளுக் கிடையேயான அபிவிருத்தி ஆணையகம் ஆகியவையும் கண்காணிப்பில் பங்கெடுத்தன. இவற்றுடன் உள்நாட்டு அமைப்புகள் பலவும் கண்காணிப்பில் ஈடுபட்டன. பொதுவாக ஐ.நா. தேர்தல் கண்காணிப்பில் ஈடுபடுவதில்லை. ஆனால், இடைக்கால அரசாங்கத்தின் வேண்டு கோளுக்கு இணங்க ஐ.நா. உம் ஒரு கண் காணிப்புக் குழுவை அனுப்பியிருந்தது.

2011 ஆம் ஆண்டு தை 9 ஆம் திகதி தொடங்கி 15 ஆம் திகதி வரை தென்சூடானின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட்டது. 2011 ஆம் ஆண்டு மாசி 7 ஆம் திகதி இந்த பொதுவாக்கெடுப்பின் முடிவு அறி விக்கப்பட்டது. பொதுவாக்கெடுப்பில் கலந்து கொண்டவர்களில் 98.83% ஆன மக்கள் பிரிந்து போக வேண்டும் என்று வாக்களித்தார்கள். இந்த பொதுவாக்கெடுப்புக்கு தகுதி பெற்றவர்களில் தென்சூடானில் இருந்து 83% ஆனவர்களும் வடசூடானிலிருந்து 53% ஆனவர்களும் வாக் களித்து இருந்தனர்.

தென்சூடானிலிருந்து புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வசித்து வந்த புலம்பெயர்ந் தோர் இந்த வாக்கெடுப்பில் வித்தியாசமான நிலைப்பாடுகளை எடுத்திருந்தனர். ஒரு பகுதி யினர் பிரிவினைக்கு எதிராக வாக்களித்து இருந்தனர், மற்றும் ஒரு பகுதியினர் வாக் கெடுப்பை புறக்கணித்து இருந்தனர். பொது வாக்கெடுப்பு முடிவுகளின் பெறுபேறாக 2011 ஆம் ஆண்டு ஆடி மாதம் 9 ஆம் திகதி தென் சூடான் எனும் புதிய நாடு உருவாகியது.

> **வடக்கு கிழக்கு வாழ் மக்களின் தலைவிதியை தீர்மானிக்கக் கூடிய பொதுவாக்கெடுப்பு தொடர்பான பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட வேண்டும் பொதுவாக்கெடுப்புக்கு முன்னர் ஒரு இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்தப்பட வேண்டும்**

தென்சூடானில் நடந்த பொதுவாக் கெடுப்பின் அனுபவங்களை வைத்துப் பார்க்கும் பொழுது ஈழத்தமிழர் கோரும் பொதுவாக்கெடுப்பும் ஏறத்தாழ இதுபோன்ற ஒன்றைத்தான் என்று புரிந்து கொள்ளலாம். பொதுவாக்கெடுப்புக்கு முன்னர் ஒரு இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று ஈழத் தமிழர் கோருகின்றனர். அந்த இடைக்கால நிர் வாகத்தின் காலப்பகுதியில் வடக்கு கிழக்கு வாழ் மக்களின் தலைவிதியை தீர்மானிக்கக் கூடிய பொதுவாக்கெடுப்பு தொடர்பான பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட வேண்டும். அந்தப் பேச்சுவார்த்தையின் முடிவுகள் இடைக்கால அர சாங்கத்தின் அரசியல் அமைப்பில் சட்டங்களாக ஆக்கப்பட வேண்டும். அந்த வாக்கெடுப்பில் வாக்களிப்பதற்கு தகுதியுடையவர்கள் யார் என்பது அவற்றுள் உள்ளடக்கப்பட வேண்டும்.

வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லிம் மக்கள், சிங்கள மக்கள் மற்றும் மலையக தமிழ் மக்களை இந்த பொதுவாக்கெடுப்பில் உள்ளடக்க வேண்டுமா என்று தீர்மானிக்க வேண்டும். அவர்களில் எந்தப் பிரிவினராவது உள்ளடக்கப்படுவது தொடர்பாக கருத்து முரண் பாடுகள் இருக்குமானால் அவற்றைத் தீர்ப்பதற்கு பிரத்தியேகமான சிறிய பொதுவாக்கெடுப்புகள் (targeted mini referendums) நடத்தப்பட்டு அவை சட்டமாக்கப்படலாம்.

சூடான் போன்ற நிலப்பரப்பிலும் சனத் தொகையிலும் பெரிய ஒரு நாட்டில் பொது வாக்கெடுப்பு சர்வதேச அனுசரணையுடன் நடத்தப்பட முடியுமாயின் இலங்கையிலும் அது சாத்தியம். அதனை சட்டரீதியாக முன்னெடுக்கத் தேவையானது இங்குள்ள அரசாங்கத்திற்கும்

ஏனைய இனங்களுக்கும் இடையேயான ஒப்பந்தம் ஒன்றே. ஆனால், ஈழத்தமிழ் மக்களை இராணுவ வன்முறையால் அடக்கிய சிங்கள பௌத்த அரசு, முஸ்லிம் மக்களை தொடர்ந்து அச்சுறுத்திக் கொண்டிருக்கும் அரசு, மலையக மக்களின் உழைப்பை உறிஞ்சி கொழுத்துக் கொண்டிருக்கும் அரசு அவ்வாறான ஓர் ஒப்பந்தத்துக்கு வராது. இன்று அது ஒரு படி மேலே போய் தன் சொந்த இன மக்களையும் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க புதிய பயங்கரவாதச் சட்டத்தை இயற்றிக் கொண்டு இருக்கிறது.

அப்படியான அரசு இருக்கும் பொழுது ஈழத்தமிழர் கோரும் பொதுவாக்கெடுப்பு நடைமுறைச் சாத்தியம் அற்றது. இதனைத்தான் பொதுவாக்கெடுப்புக்கு எதிரான குரல்கள் தமது வாதத்தின் மையப்புள்ளியாக வைக்கிறார்கள். சூடானில் தென்சூடான் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கப்பட்டதன் விளைவாக ஒரு பொது வாக்கெடுப்பு நடந்தது. அதே போன்று ஈழத்தமிழர் கோரும் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்டால் பொதுவாக்கெடுப்பு சாத்தியம். ஈழத்தமிழர் தமது தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்ற கோட்பாட்டில் உறுதியாக நிற்கிறார்கள். வடக்கிலிருந்து கிழக்கு நோக்கிய பேரணியும் இந்தக் கோட்பாட்டைத்தான் முன் நிறுத்தியது. இந்த கோட்பாட்டை ஏற்றுக் கொள்ளும் ஒவ்வொருவரும் பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்றுக் கொள்ள வேண்டும். நடைமுறைச் சாத்தியம் அற்றது என்பதற்காக சரியான கருத்தியலை கைவிட முடியாது. அந்த கருத்தியலை நடைமுறைப்படுத்த எவ்வாறு உழைக்கலாம் என்று விவாதிப்பதே எமது இலங்கையின் இனப்பிரச்சினைக்கான் தீர்வு நடவடிக்கைகளை முன்னோக்கி செலுத்தும். சூடான் நாட்டில் சுயநிர்ணய உரிமை வேண்டி போராடிய மக்கள் அரசாங்கத்துடன் ஏற்படுத்திய உடன்படிக்கையின் ஊடாக ஒரு சட்டரீதியான பொதுவாக்கெடுப்பை நடத்தினார்கள். பொதுவாக்கெடுப்புக்கான சட்டரீதியான சூழல் இல்லாத பொழுது ஸ்பெயின் நாட்டின் கிழக்கு கரையோரங்களில் வாழும் கடலோனிய (Catalonia) மக்கள் என்ன செய்தார்கள் என்பதை அடுத்த இதழில் பார்ப்போம்.

அடுத்த இதழில் தொடரும்...

(16ஆம் பக்க தொடர்ச்சி)

இந்தியாவில் நடந்த விவசாயிகளின் போராட்டத்தில் முன்னணியில் இருந்த ராகேஷ் டிகெய்ட் என்பவர் ஹஸ்டியோ காட்டில் ஒரு மரம் வெட்டப்பட்டாலும் போராட்டம் வலுக்கும் என்று கடந்த மாசி மாதம் தெரிவித்து இருந்தார்.

காங்கிரஸ் கட்சி சுரங்கத்திற்கு தான் வழங்கியிருந்த அனுமதிப்பத்திரங்களை திரும்பப் பெற்றுக் கொள்ளுமாறு மத்திய அரசாங்கத்துக்கு விண்ணப்பித்து உள்ளது. ஆனால், இதனை “தாமதிக்கும் உத்திகள்” என்று அப்பிரதேசத்தில் இருக்கும் பிரபல சமூக செயற்பாட்டாளர் அலோக் சுக்லா கூறினார். வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களை திரும்பப் பெறுவதற்கு மாநில அரசுக்கு அரசியலமைப்பு அதிகாரம் உள்ளது என்றும் அதற்கு மத்திய அரசின் அனுமதி தேவையில்லை என்றும் அவர் சொன்னார்.

சட்டீஸ்கர் மாநில அரசாங்கத்துக்கு இதனை நிறுத்த வேண்டிய அரசியல் வேணவா இல்லை, ஏனெனில் இந்த அரசாங்கத்துக்கு காங்கிரஸ் கட்சியின் இன்னொரு மாநில அரசாங்கமாகிய ராஜஸ்தான் அரசாங்கத்தால் அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன. ஏனெனில் இந்த சுரங்கத்திலிருந்து பெறப்படும் நிலக்கரியினால் பயன் பெறப் போவது ராஜஸ்தானில் உள்ள மின்சார உற்பத்தி நிறுவனம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும் சட்டீஸ்கரில் தேர்தல்கள் நடைபெற இருக்கின்றன. இது மேலும் அரசியற் சூழலை சிக்கலாக்குகிறது. வெக்கையான நீண்ட கோடை காலமும் மின்வெட்டுகளின் சாத்தியப்பாடுகளும் சக்திப் பாதுகாப்பில் அரசியல்வாதிகளின் கவனத்தை அதிகரிக்கும்.

உச்ச நீதிமன்றம் இந்த திட்டத்தை இடைநிறுத்த மறுத்து விட்டது. நிலங்களின் கையகப்படுத்தலுக்கு எதிரான வழக்கானது சுரங்க நடவடிக்கைகளுக்கு எதிரான மனுவாக ஏற்றுக் கொள்ளப்பட முடியாதது என்று அது சொல்லி உள்ளது. மேலும், பழங்குடி மக்களின் உரிமைகள் வேறாக தீர்மானிக்கப்படும் அதற்காக “அபிவிருத்தி வேலைகளை பலியிட முடியாது” என்றும் சொல்லி உள்ளது.

ஆனால் போராட்டக்காரர்கள் தாம் வெற்றியடைவோம் என்று நம்புகிறார்கள். “எங்களுக்கு நீதிமன்றங்களில் நம்பிக்கை இருக்கின்றது.” என்று போராட்டக்குழுவின் முன்னணி அங்கத்தவரான உமேஸ்வர் சிங் ஆர்மோ தெரிவித்தார். “இது ஹஸ்டியோவை பாதுகாக்க மட்டும் நடத்தப்படும் போராட்டம் அல்ல. நாங்கள் இந்த நாட்டை காக்க போராடுகிறோம். காலநிலை மாற்றத்தாலும் சூழல் மாசடைவதாலும் பாழாகிப் போய்க் கொண்டிருக்கும் பூமியை காக்க போராடுகின்றோம்.”

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் – இருப்பதை விட மோசமான சட்டத்தைத் தான் அரசாங்கம் கொண்டு வர முயற்சிக்கிறது

தொகுப்பு - ரஜீந்தினி



அம்பிகா சற்குணநாதன்

பங்குனி மாதம் 17 ஆம் திகதி அரசாங்கம் முன்வைத்த பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் (Anti Terrorism Act, ATA) தற்போது இருக்கும் பயங்கரவாத தடைச் சட்டத்திலும் (Prevention of Terrorism Act, PTA) பார்க்க மிகவும் மோச மானது என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளரும் சட்டத்தரணியுமான அம்பிகா சற்குணநாதன் தெரிவித்துள்ளார். ஊடகமொன்றுக்கு கருத்து வழங்குகையில் அவர் மேலும் தெரிவித்த விட யங்கள் வருமாறு,

இந்த சட்டத்திலும் பயங்கரவாதம் என் பதற்கு ஒரு வரைவிலக்கணம் இல்லை. பயங்க ரவாதம் என்பதற்கு சர்வதேச மட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வரைவிலக்கணம் ஒன்று இருக்கின்றது. ஆனால் இந்த சட்டத்தில் அத ற்கு மாறாக ஒரு பரந்த வரைவிலக்கணம் தான் கொடுக்கப்பட்டிருக்கிறது.

தற்போது உள்ள பயங்கரவாத தடைச் சட்டத்தில் ஒரு தடுப்பாணையை பாதுகாப்பு அமைச்சர் தான் கொடுக்கலாம். ஆனால் புதி தாக முன்வைக்கப்பட்டிருக்கும் ATA சட்டத் தில் பிரதி பொலிஸ்மா அதிபர் ஒரு தடுப்பா ணையை கொடுக்கலாம். அந்த தடுப்பாணை யில் ஒருவரை முதல் தடவையாக மூன்று மாதத் திற்கு தடுத்து வைக்கலாம். மூன்று மாதத்திற்கு பிறகும் அவரை தொடர்ந்து தடுத்து வைக்க வேண்டுமென்றால் பொலிஸ் ஓர் இரகசிய அறிக்கையை நீதிபதிக்கு கொடுத்து அவரை தொடர்ந்து தடுத்து வைக்க அனுமதிக்குமாறு கேட்கலாம். நீதிபதி அந்த அறிக்கையைப் பார்த்து இவரை தடுத்து வைப்பதற்கான காரணம் இல்லை என்று நினைத்தால் அவரை விடுதலை செய்வதற்கான அதிகாரம் நீதிபதிக்கு இல்லை. அவ்வாறான சந்தர்ப்பத்தில் இவரை கைது செய்து சிறையில் அனுப்புவதற்கு காரணம் இருக்கிறதா என்று நீதிபதி கட்டாயமாக பொலி ஸிடம் கேட்க வேண்டும் என்று சட்டம் சொல் கிறது. அப்படி காரணம் இல்லாவிட்டாலும் கூட தடுத்து வைக்கப்பட்டவரை முழுமையாக அந்த வழக்கில் இருந்து விடுதலை செய்வதற்கான அதிகாரம் நீதிபதிக்கு இல்லை. நீதிபதி அந்த நபரை பிணையில் மட்டும் தான் அனுப்ப முடியும்.

இது ஒரு கேள்வியை எழுப்புகின்றது. ஒருவரை தடுப்பாணையின் கீழ் தடுத்து வைக்க ஆதாரம் இல்லை என்று நீதிபதி முடிவு செய்து விட்டால் அவர் ஏன் பொலிஸிடம் கேட்க வேண் டும்? அந்த மாதிரியாக தடுத்து வைப்பதற்கு ஆதாரம் இல்லாவிட்டாலும் கூட ஒருவரை அந்த வழக்கில் இருந்து விடுவிக்காமல் பிணை மட்டும் கொடுக்க நீதிபதிக்கு அதிகாரம் உள்ளது என்று சொல்லப்பட்டிருப்பது ஏன்? ஆகையால் எப்படியாவது ஒருவரை சட்ட பொறிமுறைக்குள் முடக்கி வைப்பதற்கே இந்த ATA சட்டம் எத்தனிப்பதாக தெரிகின்றது.

அடுத்தது இராணுவ மயமாக்கல். தற் போதுள்ள PTA இல் இராணுவத்திற்கு ஒரு அதி காரமும் இல்லை. ஆனால் புதிய சட்டத்தில் இராணுவம் ஒருவரை கைது செய்யலாம். கைது செய்த பின்பு 24 மணித்தியாலயத்திற்கு பிறகு தான் கட்டாயமாக பொலிஸிற்கு அவரை கையளிக்க வேண்டும். மற்றையது இராணுவம் வேண்டுமென்றால் வீதியில் உங்களையும் உங்களது வாகனங்களையும் தடுத்து பரி சோதிக்கலாம். அதாவது புதிய சட்டம் இரா ணுவ மயமாக்கலை சட்டமாக்குகின்றது.

இதனூடாக இராணுவ மயமாக்கலை சர்வ சாதாரணமாக்குவதற்கு தான் அரசாங்கம் எத்த னிப்பதாக தெரிகின்றது.

இந்த புதிதாக முன்வைத்த சட்டமானது ஓர் இடத்தை தடை செய்யப்பட்ட இடமாக வர்த்தமானியூடாக பிரகடனப்படுத்துவதற்கு சனாதிபதிக்கு அதிகாரத்தை வழங்குகிறது. அவ்வாறு தடை செய்யப்பட்ட இடத்திற்கு ஒரு வரும் போக முடியாது. அந்த இடத்தை மேற் பார்வை செய்வதற்காக ஒரு அலுவலரை சனா திபதி நியமிக்கலாம். அந்த அலுவலர் தான் ஒருவரை அந்த இடத்துக்குள் அனுமதிப்பதா இல்லையா என்று தேவையான நேரத்தில் முடிவு செய்யலாம்.




உதாரணமாக நாம் காலிமுகத்திடலை எடுத்து கொள்வோம். சனாதிபதி அதனை தடை செய்யப்பட்ட இடம் என்று பிரகடனம் செய்தால் அதற்கு பொறுப்பான அதிகாரி அந்தந்த நேரங்களில் தனக்கு ஏற்றவாறு ஒரு வரை உள்ளுக்குள் செல்ல அனுமதிப்பதா இல்லையா என்று முடிவு எடுக்கலாம். நீதித் துறை இதனை மேற்பார்வை செய்ய முடியாது. எப்படி இந்த முடிவுகள் எடுக்கப்படுகின்றன என்பதற்கு வெளிப்படைத் தன்மை இல்லை. முடிவுகளை அந்த நேரத்தில் இருக்கும் அலு வலர் தமது விருப்பத்திற்கு ஏற்ப எடுக்கலாம். வேண்டுமென்றால் 10, 20 வருடத்திற்கு கூட தடை செய்யப்பட்ட இடமாக ஓர் இடத்தை சனாதிபதி வர்த்தமானியில் அறிவிக்கலாம்.

அடுத்தது ஒரு நிறுவனத்தையோ ஒரு குழுவையோ தடை செய்யப்பட்ட குழுவாக சனாதிபதி வர்த்தமானியில் பிரசுரிக்கலாம். உதாரணத்திற்கு ஒரு பல்கலைக்கழகத்தில் இருக்கும் மாணவர் சமூகத்தை கூட இந்த விதத்தில் தடை செய்யலாம். ஒரு வருடத்திற்கு இந்த குழுவை தடை செய்யலாம் என்று தான் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் ஒவ்வொரு வருட மும் அதை புதுப்பித்துக் கொண்டே போக லாம். ஒரு இடத்தை தடை செய்வதாகட்டும் ஒரு நிறுவனத்தை தடை செய்வதாகட்டும் எல்லா விதங்களிலும் இந்த சட்டத்தில் பல குறைபாடுகள் இருக்கின்றன.

அரசியல் அமைப்பில் எமக்கு கொடுக் கப்பட்ட அடிப்படை உரிமைகளை மீறும் பல விடயங்கள் இந்த சட்டத்தில் உள்ளன. மேலும், சர்வதேச மனித உரிமை சாசனங்களில் உள் ளடக்கப்பட்ட உரிமைகளை மீறுகின்ற பல விடயங்களும் இந்த சட்டத்தில் உள்ளன. தற்போது இருக்கும் PTA இன் கீழ் மரண தண் டனை இல்லை. ஆனால் புதிய சட்டத்தில் கொலை குற்றத்திற்கு மரண தண்டனை விதிக் கப்பட்டிருக்கின்றது.

இந்த புதிய சட்டம் சர்வதேச மட்டத் திலும் கண்டிக்கப்பட்டுள்ளது. உதாரணத்திற்கு சர்வதேச சட்ட வல்லுநர்கள் ஆணையம் கூட இரண்டு நாட்களுக்கு முன்பு ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார்கள். இந்த சட்டத்தில் இப் பொழுது நான் குறிப்பிட்ட விடயங்கள் எல்லாம் பிரச்சனைக்கு உரிய விடயங்கள். இவை மனித உரிமைகளை மீறுகின்ற விடயங்கள். இப்பொழுது இருக்கும் சட்டத்தை நீக்கி விட்டு அதிலும் பார்க்க மிகவும் மோசமான சட்டத்தை தான் அரசாங்கம் கொண்டு வர எத்தனிக்கின்றது என்று அவர்கள் கூறி இருக்கின்றார்கள்.

GSP+ சலுகைகளை பெற்றுக் கொள்வத ற்கு அரசாங்கம் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்க வேண்டும் என்பதை ஒரு நிபந்தனையாக வைக்கப்பட்டுள்ளது. அதனை நீக்கி சர்வதேச சட்டங்களுக்கு ஏற்ப ஒரு சட்டத்தை இயற்ற வேண்டுமென்று கேட்கப்பட்டுள்ளது. ஆனால் PTA ஐ நீக்குவது போல் நீக்கி விட்டு அதி லும் மோசமாக சர்வதேச மனித உரிமை

> ஒரு சமூகத்திற்கு எதிராக, ஒரு குழுவுக்கு எதிராக நீங்கள் வன்மத்தை அல்லது வன்முறையை அல்லது பாரபட்சத்தை தூண்டினால் அது ஒரு குற்றமாகும் ஒரு குழுவிற்கு அல்லது ஒரு சமூகத்திற்கு எதிராக எடுக்கப்படும் எந்தவொரு நடவடிக்கையையும் பயங்கரவாதம் என்று ஆக்கி இருக்கின்றார்கள்

சட்டங்களை மீறும் ஒரு சட்டத்தை தான் அரசாங்கம் முன்வைத்திருக்கின்றது.

எமது நாட்டில் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்படிக்கை (INTERNATIONAL COVENANT ON CIVIL AND POLITICAL RIGHTS, ICCPR) என்ற ஒரு சட்டம் இருக்கின்றது. நடைமுறையில் அந்த சட்டம் எமது குடியியல் அரசியல் உரிமைகளை பாதுகாப்பதற்காக கொண்டுவரப்பட்ட சட்டம். ஆனால் கடந்த காலங்களில் இருந்த அரசாங்கங்கள் அந்த சட்டத்தை ஆயுதமாக்கி எமது உரிமைகளை மீறத்தான் அந்த சட்டத்தை நடைமுறையில் பாவித்து இருக்கிறார்கள்.

உதாரணமாக, அஹ்நாப் ஜசீமை எடுத்துக் கொண்டால், அவர் ஒரு கவிஞர். அவரும் இந்த சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டார். அதற்கு பிறகு சப்திஹ சரத்குமார, அவர் ஒரு எழுத்தாளர். நான்கு ஐந்து வருடங்களுக்கு முன்பு அவரும் இந்த சட்டத்தின் கீழ் தான் தடுத்து வைக்கப்பட்டார். இந்த சட்டம் என்ன கூறுகிறது என்றால் ஒரு சமூகத்திற்கு எதிராக, ஒரு குழுவுக்கு எதிராக நீங்கள் வன்மத்தை அல்லது வன்முறையை அல்லது பாரபட்சத்தை தூண்டினால் அது ஒரு குற்றமாகும் என்று. தற்போது புதிதாக முன்வைக்கப்பட்ட இந்த பயங்கரவாதத்திற்கு எதிரான சட்டத்தை நாம் பார்த்தோமானால் அதில் இந்த பிரிவும் உள்ளடக்கப்பட்டிருக்கின்றது.

அதாவது, ஒரு குழுவிற்கு அல்லது ஒரு சமூகத்திற்கு எதிராக எடுக்கப்படும் எந்தவொரு நடவடிக்கையையும் அவர்கள் பயங்கரவாதம் என்று ஆக்கி இருக்கின்றார்கள். இந்த மாதிரியான நோக்கங்களுக்காக சில “குற்றங்களை” புரிந்தால் அது பயங்கரவாதம் ஆகும். அதாவது ஒரு சமய தலத்தையோ அல்லது கலாச்சார தலத்தையோ இடத்தையோ பாதிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டால் அது ஒரு குற்றமாகும். உதாரணமாக குருந்தூர் மலையை எடுத்துக் கொள்வோம். குருந்தூர் மலையில் இருந்த இந்து ஆலயத்தினை தகர்த்து விட்டு அவர்கள் இப்பொழுது பௌத்த ஆலயத்தை கட்டிக் கொண்டு இருக்கின்றார்கள். அதற்கு எதிராக பல தடவை அங்குள்ள மக்கள் போராட்டங்களை நடத்தி இருக்கின்றார்கள். இந்த புதிய சட்டத்தை பாவித்து அந்த போராட்டங்கள் அங்கு இருக்கும் அந்த கலாசார சமய தலத்திற்கு பாதகம் விளைவிக்கின்றது என்று அவர்கள் கூறலாம். அதனை தகர்க்க முனைகிறார்கள், குற்றம் புரிய முற்படுகின்றார்கள் என்று சொல்லலாம். அதை அவர்கள் செய்வதன் நோக்கம் சிங்கள மக்களுக்கு எதிராக வன்மத்தை வன்முறையை பாரபட்சத்தை தூண்டுவதற்கே என்று கூறலாம். இந்த புதிய சட்டத்தின்படி அது ஒரு பயங்கரவாத குற்றமாகும். அங்கு போராடும் மக்களை இந்த சட்டத்திற்கு கீழ் கைது செய்வதற்கு வாய்ப்புள்ளது. ஆகையால் இந்த சட்டம் இலகுவாக துஸ்பிரயோகப்படுத்தப்படக் கூடிய சட்டம் என்பதை இங்கு நாங்கள் காணலாம்.

இந்த புதிதாக முன்வைக்கப்பட்ட பயங்கரவாதத்திற்கு எதிரான சட்டம் நல்லாட்சி காலத்தில் முதலில் உருவாக்கப்பட்டது. அந்த நேரத்தில் அது பயங்கரவாத முறியடிப்பு சட்டம் (Counter Terrorism Act, CTA) என்று சொல்லப்பட்டது. அந்த சட்டத்தில் உள்ள பல விடயங்களைத் தான் ATA சட்டத்திலும் உள்ளடக்கி இருக்கின்றார்கள். ஆனால் இதில் வேறு என்ன நடந்திருக்கிறது என்றால் அந்த நேரத்தில், 2018 இல், நல்லாட்சி அரசாங்கம் அந்த சட்டத்தை கொண்டு வந்த போது பலர் அதற்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார்கள். அந்த வழக்கின் பின்பு உச்ச நீதிமன்றம் சில பரிந்துரைகளை முன்வைத்தது. அதாவது எமது அரசியல்

அமைப்பிற்கு ஏற்ப இந்த சட்டம் இருக்க வேண்டுமென்றால் அரசாங்கம் என்ன மாற்றங் களை இந்த சட்டத்திற்கு செய்ய வேண்டு மென்று பரிந்துரைத்தார்கள்.

நல்லாட்சி காலத்தில் இருந்த CTA இலிருந்து 75 அல்லது 80 வீதமானவை இந்த புதிய ATA சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்று சொல்லலாம். உச்ச நீதிமன்றம் கொடு த்த பரிந்துரைகளும் இதில் இருக்கின்றன. ஆகையால் இதனை மேலோட்டமாக பார்க்கும் பொழுது இதில் எத்தனையோ பாதுகாப்புகள் இருப்பது போல் தான் எமக்கு தெரியலாம். ஆனால் நுணுக்கமாக பார்த்தால் அதில் இருக் கும் பிரச்சனைகள் தெளிவாகத் தெரியும். உதாரணமாக, புதிய சட்டத்தில் நீதிபதி மேற்பார்வை இருப்பது போல் இருக்கின்றது. ஆனால் உண்மையாகவே நீதிபதியின் கைகள் கட்டுப்பட்டு இருக்கின்றன. அவருக்கு அதிகா ரம் அவ்வளவாக இல்லை. மறுபுறத்தில் சனா திபதிக்கு பரந்த அதிகாரங்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன.

இவர்கள் இந்த சட்டத்தை இயற்றும் போது கவனம் செலுத்தி உச்ச நீதிமன்றம் கூறிய பரிந்துரைகளையும் உள்ளடக்கி இருப்ப தாக ஒரு தோற்றப்பாட்டை உருவாக்கி இருக்கி றார்கள். ஆனால் பரிந்துரைகளை உள்ளடக்கி இருந்தாலும் கூட, சர்வதேச சட்டங்கள், சர்வதேச மனித உரிமை சாசனங்கள் முக்கியமாக சர்வ தேச மட்டத்தில் மனித உரிமைகள் பாது காப்பதற்கும் மனித உரிமைகளை நடை முறைப்படுத்துவதற்கும் இலங்கைக்கு இருக்கும் கடமைகளுக்கு எதிராகத் தான் இந்த சட்டம் உள்ளது.

இலங்கையில் தற்போது இரண்டு சந்தர்ப் பங்களில் தான் இராணுவத்திற்கு பொலிஸ் அதிகாரங்கள் கொடுக்கப்படுகின்றன. ஒன்று, பொது பாதுகாப்பு சட்டத்தின் கீழ் சனாதிபதி ஓர் அவசரகால நிலைமையை பிரகடனப்படுத்தி, அந்த அவசரகால நிலைமைக்கு கீழ் அவசரகால விதிமுறைகளை வெளியிட வேண்டும். அதற்கு கீழ் தான் இராணுவத்திற்கு பொலிஸ் அதிகாரங்கள், அதாவது கைது செய்வதற்கும் தடுத்து வைப்பதற்குமான அதிகாரங்கள் கொடு க்கப்படுகின்றன.

இரண்டாவது சந்தர்ப்பம், பொது பாதுகாப்பு சட்டத்தின் பிரிவு 12 இன் கீழ் சனாதிபதிக்கு ஒரு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதா வது, சட்டத்தையும் அமைதியையும் நிலைநாட்டு வதற்காக இராணுவத்தை பாவிப்பதற்கு ஒவ் வொரு மாதமும் அவர் ஒரு வர்த்தமானி அறி விப்பை பிரசுரிக்கலாம். அது அவசரகால நிலை மையை பிரகடனம் செய்வதிலும் பார்க்க மிக வும் மோசமானது.

அவசரகால நிலைமையை பிரகடனப்ப டுத்தினால் அது பாராளுமன்றத்தால் அங்கீகரிக் கப்பட வேண்டும். பாராளுமன்றத்தில் வாக்க ளிக்கப்பட்டு அனுமதிக்கப்பட வேண்டும். ஆனால் பிரிவு 12 இன் கீழ் இருக்கும் இந்த அதிகாரம், அதாவது ஒவ்வொரு மாதமும் ஒரு வர்த்தமானியை பிரசுரித்து இராணுவத்திற்கு பொலிஸ் அதிகாரம் கொடுப்பது மிகவும் பயங்கர மான விடயம். அதனை சனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவி ஏற்ற காலத்தில் இருந்து செய்து கொண்டே தான் இருக்கிறார். அதற்கு முன்பு கோட்டாபய இராஜபக்சவும் பதவி ஏற்ற காலத்தில் இருந்து செய்து கொண்டே இருந்தவர். அதற்கு முன் மைத்திரிபால சிறிசேன கூட ஈஸ் டர் குண்டு தாக்குதலுக்கு பிறகு பிரிவு 12ஐ பாவித்து ஒவ்வொரு மாதமும் இராணுவத்திற்கு இந்த அதிகாரத்தை கொடுத்திருந்தார். அதற்கு முன் மகிந்த இராஜபக்ச கூட இரண்டு வருட ங்களுக்கு இதனை செய்தார். அதற்கு முன் சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க கூட சில சமயங்களில் ஒவ்வொரு மாதமும் வர்த்த மானியை பிரசுரித்து இராணுவத்திற்கு பொலி ஸாரின் அதிகாரங்களை கொடுத்தார்.

ஆனால் இந்த புதிய சட்டத்தில் இந்த மாதிரியாக ஒவ்வொரு மாதமும் செய்யாமல் அதனை நிரந்தரமாக்குவதற்கு அவர்கள் எத்தனிக் கின்றார்கள். அதை சட்டமாக்குவதற்கும் அதை சர்வ சாதாரணமாக்குவதற்கும் இந்த புதிய சட்டத்தின் ஊடாக செய்ய முற்படுகிறார்கள்.

# அதானி குழுமத்துக்கு எதிரான பழங்குடி மக்களின் போராட்டம்



நிகில் இனாம்தார் (Nikhil Inamdar, BBC News) — தமிழாக்கம் - நிமிர்வு



அபிவிருத்தி நடவடிக்கைகள் மூலம் எமது சமூகம் பொருளாதார வளர்ச்சி அடைகிறது, மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கிறது, மேற்குலக கருத்தியலின்படி எமது வாழ்க்கைத்தரம் உயர்கிறது. ஆனால் இவற்றுக்காக நாம் கொடுக்கும் விலை என்ன என்பதையும் அதன் மூலம் நாம் பெறுபவை உண்மையிலேயே எமது வாழ்வியலுக்கு ஒத்திசைபான நன்மைகள் தானா என்பதை நாம் ஆழமாக சிந்திக்க வேண்டும். எமது பாரம்பரிய வாழ்வியலையும் அதனூடாக நாம் அடைந்த உடல் உள ஆரோக்கியங்களையும் கைவிட்டு ஒரு மேற்குலக கருத்தியலின் படி உயர்த்தப்படும் வாழ்க்கைத்தரம் எம்மை ஒரு மகிழ்ச்சியான சமூகமாக வளர்த்தெடுக்குமா என்பது பற்றி ஆராய வேண்டும்.

இந்தப் பின்னணியை வைத்துக் கொண்டு தான் இன்று எம்மக்கள் மத்தியில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகளை நாம் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். அந்த வகையில் இந்தியாவின் சட்டீஸ்கர் மாநிலத்தில் நடத்தப்படும் ஒரு தொழில் முயற்சியையும் அதனூடாக சமூகத்தில் எழுந்திருக்கும் முரண்பாடுகள் பற்றியும் BBC இல் வந்த ஒரு கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.

இந்த அபிவிருத்தி நடவடிக்கையை எதிர்த்து சுற்றுச்சூழலையும் தமது வாழ்வியலையும் பாதுகாக்க விளையும் மூதாளர்களுக்கும் இளையோர்களுக்கும் இடையில் நடக்கும் ஊடாட்டத்தை இந்தக் கட்டுரை சித்தரிக்கிறது.

மத்திய இந்தியாவின் அடர்ந்த காட்டுப் பகுதியில் வாழும் பழங்குடி மக்கள் தமது வாழ்விடங்களில் அதானி குழுமத்தினால் உருவாக்கப்பட இருக்கும் புதிய நிலக்கரிச் சுரங்கத்துக்கு எதிராக ஒரு வருடத்துக்கும் மேலாக போராடி வருகிறார்கள். அண்மைக்காலங்களில் பல உயர் அரசியல்வாதிகளினதும் பிரபல்யங்களினதும் ஆதரவு அவர்களுக்கு கிடைத்துள்ள போதிலும், பழங்குடி மக்களுக்கு வெற்றி என்பது அரிதான ஒன்றாகவே இருக்கும்.

சட்டீஸ்கர் (Chhattisgarh) மாநிலத்தில் பழங்குடி மக்களின் குடில்களைக் கொண்ட ஹரிஹர்பூர் (Hariharpur) என்ற சிறிய கிராமம் இரண்டு முரண்பட்ட உலகங்களைப் பிரிக்கும் எல்லைக் கோட்டில் அமைந்திருக்கின்றது. அதன் கிழக்குத் திசையில் கண்ணுக்கெட்டிய தூரம் வரை அதானி குழுமத்தால் 10 ஆண்டுகளுக்கும் மேலாக இயக்கப்படும் திறந்தவெளி நிலக்கரிச் சுரங்கம் பரந்து கிடக்கிறது. மேற்குத் திசையில் ஹஸ்டியோ (Hasdeo) காடு பரந்து விரிந்து கிடக்கிறது. அங்கு நிலத்துக்கு அடியில் பல பில்லியன் தொன்கள் கணக்கில் உயர் ரக நிலக்கரி புதைந்து கிடக்கிறது. அந்தக் காட்டை அழித்து நிலக்கரியை அகழ்ந்து எடுக்க நினைக்கும் அதானி குழுமத்திலிருந்து அந்தக் காட்டையும் தமது வாழ்வியலையும் பாதுகாக்க அக்கிராமத்து பழங்குடியினர் போராடி வருகிறார்கள். தாவீது என்ற சிறுவனுக்கும் கோலியாத் என்ற பலவானுக்கும் (David vs Goliath) இடையில் நடக்கும் போர் இது.

420,000 ஏக்கர்கள் (1700 சதுர கி.மீ) பரப்பளவு கொண்ட இந்த அடர்ந்த காடு மத்திய இந்தியாவின் மிகப் பெரிய தொடர்ச்சியான

காடு என்று சொல்லப்படுகிறது. இதனை பல ரும் "சட்டீஸ்கரின் சுவாசப்பைகள்" என்று அழைக்கிறார்கள்.

புதிய நிலக்கரிச் சுரங்கம் அமைக்கப் படுவதை பழங்குடி மக்கள் மிகவும் கடுமையாக எதிர்த்து 10 ஆண்டுகளுக்கும் மேலாக போராடி வருகிறார்கள். அரசாங்கத்துக்கு சொந்தமான காடுகள் தொடர்பான ஆய்வு நிறுவனம் கூட இந்த சுரங்கத்தால் ஏற்படக்கூடிய சூழல் மற்றும் வாழ்வியலுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்களை காரணம் காட்டி கடும் எதிர்ப்பையும் எச்சரிக் கையையும் விடுத்துள்ளது. இந்த எதிர்ப்புகளை எல்லாம் தாண்டி புதிய சுரங்கத்துக்கான அனுமதிப்பத்திரம் கடந்த ஆண்டு வழங்கப் பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து காலவரை யற்ற போராட்டத்தை பங்குனி 2, 2022 இலிருந்து பழங்குடி மக்கள் கையில் எடுத்துள்ளார்கள்.

இதில் சுவாரசியமான விடயம் என்ன வென்றால் பிரதமர் நரேந்திர மோடியும் அவரது பாரதிய ஜனதா கட்சியும் அதானி குழுமத்துக்கு ஆதரவு வழங்குவதாக குற்றம் சாட்டி வரும் காங்கிரஸ் கட்சியின் கட்டுப்பாட்டில் இருக்கும் சட்டீஸ்கர் அரசாங்கம் தான் இந்த அனுமதிப் பத்திரத்தை வழங்கி இருக்கிறது.

**அதிகரித்து வரும் எதிர்ப்பு**

ஹரிஹர்பூரிற்கு செல்லும் பாதைக்கு அருகில் இருக்கும் புற்களால் வேயப்பட்ட ஒரு கொட்டகைதான் இந்தப் போராட்டத்தின் மையமாகும். இங்குதான் பழங்குடி மக்கள் கடந்த ஒரு வருடமாக தொடர்ச்சியான போராட்டத்தை முன்னெடுத்து வருகிறார்கள். ஒவ்வொரு நாளும் அண்டையிலுள்ள பாடேபூர், காட்பர்ரா, சால்கி (Fatehpur, Ghatbarra and Salhi) ஆகிய கிராமங்களிலிருந்து இங்கு வந்து சத்தியாக்கிரகப் போராட்டத்தை நடத்தி வருகிறார்கள். வாரத்தில் ஒரு நாள் நூற் றுக்கணக்கானவர்கள் ஒன்று கூடி அதானியை "திரும்பிப் போ" என்று கோசமிட்டு வருகிறார்கள்.

"எமது கிராம சபை இந்த காணிகளை தமக்கு தந்து விட்டதாக காட்டும் போலிப் பத் திரங்களை தயாரித்து இந்த காணிகளை சட்ட விரோதமாக அதிகாரிகள் கையகப்படுத்தி விட் டனர். இந்தக் காணி அபகரிப்புக்கு நாம் ஒரு பொழுதும் இயையவில்லை." என்று Hasdeo Arand Bachao Sangharsh Samiti என்ற போரா ட்டக் குழுவின் உறுப்பினர் BBC இற்கு தெரி வித்தார்.

கருத்து கேட்டு BBC மேற்கொண்ட வேண்டுகோள்களுக்கு சட்டீஸ்கர் அரசாங்கம் பதிலளிக்கவில்லை. ஆனால் அதானி குழுமம் இந்தக் குற்றச்சாட்டுகளை மறுத்துள்ளது. தன்னு டைய வேலைகளை அந்த நிலத்தின் சட்டங்க ளுக்கு முற்றுமுழுதாக கட்டுப்பட்டுத்தான் செய்வ தாக தெரிவித்தது. தற்பொழுது இருக்கும் சுரங் கத்தையும் அங்கு புதிதாக அமைக்கப்படவிருக் கும் சுரங்கத்தையும் Rajasthan Rajya Vidyut Utpadan Nigam (RRVUNL) என்ற நிறுவனம் தான் கையாள்கிறது என்று தெரிவித்தது. இந்த நிறுவ னம் தான் நிலங்களை கையகப்படுத்தல் மற்றும் இறுக்கமான சட்டவிதிகள், ஒழுங்குமுறைகளு க்கு அமைவாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு புனர்வாழ்வளித்தல் என்பவற்றை கவனித்து வருவதாக தெரிவித்தது. இந்நிறுவனம் கிராம மக்களின் அனுமதியைப் பெறுவதற்கு தேவை யான எல்லா வேலைகளையும் செய்து அவற் றைப் பதிவு செய்துள்ளதாகவும் தெரிவித்தது. அதானி குழுமம் இந்த நிறுவனத்தின் சுரங்க அபிவிருத்தி மற்றும் இயக்கத்துக்கு பொறுப்பாக இருப்பதோடு அதன் 74% பங்குதாரராகவும் இருக்கின்றது.

ஆனால், BBC பயணம் செய்த பல கிராமங் களிலும், கிராம சபைகளினது கருத்துகள் மீறப் பட்டன அல்லது கவனிக்கப்படாமல் விடப்பட் டன, என்று போராடும் பழங்குடி மக்கள் குற்றம் சுமத்தினார்கள். ஹஸ்டியோ அரன்ட் (Hasdeo Arand) பிரதேசங்களில் உள்ள பழங்குடி பகுதிக ளில் கிராமசபைகளின் கருத்துகள் கவனத் தில் எடுக்கப்பட வேண்டும் என்பது சட்டம் ஆகும். குறைந்தது மூன்று கிராமத்தைச் சேர்ந்த மக்கள் இந்த சட்டமீறல்களை விசாரிக்குமாறு மாவட்ட அதிகாரத்திடம் முறையிட்டுள்ளார்கள். மேலும் இந்த திட்டத்துக்கு வழங்கப்பட்ட நிலம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான அனுமதிப்பத்திரங்களுக்கு எதிராக உச்ச நீதி மன்றத்தில் தொடரப்பட்டுள்ள வழக்கும் இந்த விசாரணைகளுக்குள் அடக்கம்.

"இந்தக் காடுகளில்தான் எங்கள் தெய்வங்

கள் குடியிருக்கின்றன. நாங்கள் சிலைகளை கும்பிடுவதில்லை. இந்த சுரங்கங்கள் எமது பண்டைய மரபுகளையும் வாழ்க்கை முறைகளையும் உடைத்துப் போட்டு விடும்." என்று ராம்லால் காரயம் என்ற போராட்டக்காரர் சொன்னார். 2021 இல் அவர் உட்பட பலர் சட்டீஸ்கர் மாநிலத்தின் தலைநகரான ராய்ப்பூர் வரை 300 கிலோ மீட்டர் நடந்து சென்று இந்த சுரங்க நடவடிக்கையை நிறுத்துமாறு போராடினர்.

**வளர்ந்துவரும் வேறுபாடுகள்**

இந்த மக்களிடமிருந்து வாக்குமூலம் பெறுவது கடினமாக்கப்பட்டுள்ளது. போராட்டம் கூர்மை அடைய அடைய இந்தக் காட்டுப்பகுதிகள் தீவிர கண்காணிப்புக்கு உட்படுகின்றன. அதனால் மக்கள் தமது முகங்களை காட்ட பயப்படுகிறார்கள்.

நாங்கள் அங்கிருந்த இரு நாட்கள் முழுவதும் உந்துருளிகளிலும் வாகனங்களிலும் வந்தவர்களால் தொடர்ச்சியாக பின்தொடரப்பட்டோம். காட்பர்ரா கிராமத்தின் தலைவரை சந்திப்பதற்காக அந்தக் கிராமத்தில் நுழைய முற்பட்ட பொழுது எமது வாகனத்தை சேதப்படுத்தப் போவதாக சிலர் மிரட்டினார்கள். அவர்கள் அச்சமூகங்களைச் சேர்ந்த இளைஞர்கள். அவர்கள் சுரங்க அபிவிருத்தியை தீவிரமாக ஆதரிக்கிறார்கள். அவர்கள் சிறுபான்மையினரே யாகிலும் அவர்களின் குரல்கள் பெரியளவில் ஒலிப்பதாக தோன்றுகின்றன.

"முன்னேற்றம் இருக்க வேண்டுமாயின் ஓரளவு சேதாரம் இருக்கத்தான் செய்யும்" என்று சொல்கிறார் பாடேபூர் கிராமத்தைச் சேர்ந்த கேசவ் சிங் போர்டே. நாம் காட்பர்ரா கிராமத்தை நோக்கி சென்ற போது ஓர் ஒடுக்கமான பாதையில் வைத்து எமது வாகனத்தை இவரும் இன்னும் சிலரும் சுற்றி வந்து மிரட்டினார்கள்.

"காட்டிலிருந்து வரும் பொருட்களைக் கொண்டு வாழ்க்கை நடத்துவதை நாங்கள் விரும்பவில்லை. எங்களுக்கு அதைவிட உயரிய அபிலாசைகள் இருக்கின்றன." என்று அவர் தெரிவித்தார். இந்த போராட்டம் தொடர்பாக ஒரு பக்கச்சார்பற்ற கருத்தாடல் நடத்தப்பட வேண்டும் என்று அவர் சொன்னார்.

இன்னொரு கிராமத்துக்கு செல்லும் வழியில் சந்திரகுமார் என்பவர் எமது வண்டியை நிறுத்த எத்தனித்தார். அவர் அதானி குழுமத்தின் தற்போதைய சுரங்கத்தில் தொழில்நுட்பவியலாளராக வேலை செய்வதாக சொன்னார். அவர் அந்நிறுவனம் கிராமங்களுக்கு பாடசாலைகள், குடிநீர் வசதி மற்றும் சுகாதார வசதிகள் போன்ற நல்ல விடயங்களை கொண்டு வந்திருப்பதாக சொன்னார்.

உள்ளூர் மக்களின் கொள்ளளவை அதிகரிக்க தாம் பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக அதானி குழுமம் BBC இற்கு தெரிவித்தது. 800 மாணவர்கள் படிக்கக் கூடிய ஒரு பள்ளிக்கூடத்தைக் கட்டியது, 4000 இளையோருக்கு தொழிற்பயிற்சி அளித்தது, நடமாடும் சுகாதார நிலையங்களை ஏற்படுத்தியது உட்பட பல வேலைகளை செய்துள்ளதாக அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். மேலும் 2013 ஆம் ஆண்டிலிருந்து செயற்பட்டு வரும் PEKB சுரங்கம் மட்டும் 15000 பேருக்கு மேலானவர்களுக்கு நேரடி மற்றும் மறைமுகமான வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தி உள்ளதாக தெரிவித்தனர். இது "உள்ளூர் மக்களின் பலமான ஆதரவு இன்றி சாத்தியப்பட்டு இருக்காது" என்றும் சுட்டிக் காட்டினார்கள்.

ஆனால், இவ்வாறாக பழங்குடி சமூகத்துடன் நேர்மறையாக ஊடாடுவதன் மூலம் அவர்களது போராட்டத்தை கைவிடுமாறு தூண்ட அதானி குழுமம் முயற்சிப்பதாக கிராம மக்களும் போராட்டக்காரர்களும் குற்றம் சுமத்துகிறார்கள். அதானி குழுமம் காட்டைச் சூழ வசிக்கும் ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் இளையோரைத் திரட்டியுள்ளதாகவும் அவர்களைக் கொண்டு கிராம மக்களை கண்காணிப்பதாகவும் அதனூடாக போராட்டம் தனது கட்டுப்பாட்டை மீறிப் போகாமல் இருக்க வகை செய்வதாகவும் அவர்கள் சொல்கிறார்கள்.

**மாறிவரும் அலை**

கடந்த ஆண்டு ஒரு குறுகிய காலத்திற்கு பழங்குடி மக்களின் கோரிக்கைகளுக்கு செவி சாய்க்கப்படுவது போல் ஒரு தோற்றம் இருந்தது. பிரபலமான அரசியல்வாதியான ராகுல்காந்தி கூட தனது கட்சியைச் சேர்ந்த மாநில அரசாங்கம் சுரங்கத்துக்கு அனுமதியளித்ததை வெளிப்படையாக கண்டித்தார்.

(09 ஆம் பக்கம் பார்க்கவும்)

# கிழக்கின் பெண்களின் வறுமையும் வெளிநாட்டு வேலைவாய்ப்பின் திறந்த கதவும்



கார்த்திகா

கிழக்கில் அதிகமான பெண்கள் ஏற்கனவே வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்து வந்த நிலையில் தற்போதைய பொருளாதார நெருக்கடி இன்னும் அவர்களை பின்தங்கிய நிலைக்கு கொண்டு சென்றுள்ளது. அடிப்படைத் தேவைகளைக் கூட நிறைவேற்றிக் கொள்வதில் சிரமத்தை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறு பெண்கள் வறுமைக்கோட்டின் கோரப்பிடியில் சிக்குண்டு காணப்பட மூலகாரணங்களாக கணவன் பொறுப்பற்றவராக அல்லது குடிபோதைக்கு அடிமைப்பட்டவராக காணப்படல், யுத்தத்தால் அல்லது அசாதாரண காரணிகளால் கணவரின் இழப்பு ஏற்பட்டிருத்தல் போன்றவற்றை குறிப்பிடலாம்.

இவ்வாறான சூழலில் பெண்கள் தமது குடும்பத்தை தனியொருவராக நின்று பாதுகாக்கும் வகையில் வருமானத்தை தரக்கூடிய வேலைக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்படுகின்றது. ஆனால் போதிய கல்வி அறிவு இல்லாததால் கூலி வேலை போன்ற உடலை வருத்தும் வேலைகளுக்கும் குறைவான வருமானம் தரக்கூடிய வேலைகளுக்குமே அவர்களால் செல்ல முடிகின்றது. இது போன்ற நிலையில் கிழக்கில் பெண்களில் பெருமளவானோர் மத்திய கிழக்கு நாடுகளுக்கு செல்ல முயற்சிக்கின்றனர். அவர்களின் வறுமை மற்றும் இயலாமையை பயன்படுத்திக் கொள்ளும் சில முகவர்கள் தவறான முறையில் அவர்களை பயன்படுத்திக் கொள்கின்றனர்.

நிறுவனங்களில் வேலைவாய்ப்பு எனக் கூறி வீட்டு வேலைகளுக்கும், வீட்டு வேலைகளுக்கு எனக்கூறி பாலியல் தொழில் போன்றவற்றுக்கும், சில சிறுமிகளுக்கு போலிக் கடவுச்சீட்டை ஏற்பாடு செய்து வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கும் செயற்பாடுகளும் நடக்கின்றன. இதன் மூலம் பல பெண்கள் இன்றளவுவரை பாதிக்கப்பட்ட வண்ணமே உள்ளனர். இதனால் அவர்களின் பிள்ளைகளும் பாதிக்கப்படுகின்றனர்.

இது ஒரு தனிநபர் சம்பந்தப்பட்ட பிரச்சினை அல்ல. இவ்வாறாக பல பெண்கள் பல்வேறுபட்ட பகுதிகளில் பாதிக்கப்படுவது ஒரு சமூகம் சார்ந்த பிரச்சினை. இவ்வாறாக எமது சமூகப் பெண்கள் பாதிக்கப்படுவது எமது சமூகத்தின் முன்னேற்றத்தை தடுத்து பின்னோக்கியே செல்ல வைக்கும். ஏனெனில் ஒரு வறுமை கோட்டுக்கு கீழ் உள்ள பெண் தலைமை தாங்கும் குடும்பத்தில் அவளைத் தொடர்ந்து அவளது பிள்ளைகளும் அவளைப் போன்றே கல்வியில் ஈடுபாடு இன்றி அடிப்படை கல்வி அறிவின்றி வெளிநாடுகளுக்கு செல்வதற்காக முனைகின்றனர். அவர்களும் பிழையாக உபயோகிக்க நினைக்கும் சில சமூக விரோத செயல்களில் ஈடுபடும் நபர்களால் ஏமாற்றப்படுகின்றனர். இவ்வாறாக ஒரு பயங்கரமான சுழற்சிக்குள் மாட்டுப்பட்டு எமது சமூகத்தின் பெண்கள் முன்னேற முடியாமல் முடக்கப்படுகின்றனர். ஒரு பிழையான தொடர்ச்சி குடும்பங்களுக்குள் ஏற்பட்டு அதுவே சமூகம் பிழையான ஒரு விடயத்தை தொடர்ந்து செய்வதாக முடிகிறது.

ஏற்கனவே பொருளாதார நெருக்கடியில் இருந்து வந்த பெண்களை கொரோனாவிற்கு பின்னான விலையேற்றங்களும், அடிப்படைத் தேவையை பூர்த்தி செய்ய முடியாத வங்குரோத்து நிலைக்கு தள்ளியுள்ளன. இந்த நிலைமை பெண்களை இன்னும் ஏமாற்றி வெளிநாடுகளுக்கு அழைத்துச் சென்று அங்கே பாலியல் தொழில் உள்ளிட்ட சட்ட விரோத வேலைகளில் ஈடுபடுத்துவதற்கு உகந்த நிலையை கொடுத்துள்ளது. ஓமானுக்கு அழைத்து செல்லப்பட்ட பெண்கள், அங்கு பல்வேறு இன்னல்களை அனுபவித்து வருகின்றமையை இலங்கை குற்றப்புலனாய்வு திணைக்களம் உறுதிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களை பெற்று தருவதாக கூறி, சுற்றுலா விசாவின் மூலம் ஓமானிற்கு பெண்களை அழைத்து சென்று, அங்கு ஆட்கடத்தல் வர்த்தகம் முன்னெடுக்கப்பட்டு வந்தமை, வருகின்றமை தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு தகவல் கிடைத்துள்ளதாக செய்திகள் அண்மையில் வெளிவந்தன. இதையடுத்து, குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் ஆட்கடத்தல், வர்த்தக விசாரணை மற்றும் சமுத்திர குற்றச்செயல் விசாரணை பிரிவு விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் தகவல்கள் வந்தன. இந்த பிரிவின் பணிப்பாளர் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் சமரநாயக்கவின் கண்காணிப்பின் கீழ் விசேட விசாரணை குழுவொன்று ஓமான் நோக்கி பயணித்ததாகவும் ஓமானிலுள்ள பாதுகாப்பு நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள சுமார் 45 இலங்கை பெண்களிடம், குறித்த அதிகாரிகள் வாக்குமூலங்களை பதிவுசெய்து கொண்டதாகவும் அத்தகவல்கள் தெரிவித்தன.

கடவுச்சீட்டில் சுற்றுலா அனுமதிப்பத்திரத்துடன் மட்டும் இலங்கையிலிருந்து அழைத்து செல்லப்பட்ட பெண்கள், பல்வேறு இன்னல்களை அனுபவித்து, அதன் பின்னர் தாம் கடமையாற்றிய வீடுகளிலிருந்து தப்பிச் சென்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. இவ்வாறு தமது தொழில் வழங்குநரிடமிருந்து தப்பிய பெண்களே இவ்வாறு பாதுகாப்பு நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் இவர்களது கடவுச்சீட்டு உள்ளிட்ட ஆவணங்களை, இவர்களுக்கு வேலை வழங்கியவர்களே வைத்துக் கொண்டிருப்பதும் தெரிய வந்தது. இதனால், இந்தப் பெண்களுக்கு மீண்டும் தாயகம் திரும்ப முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. பாலியல் தொழிலில் ஈடுபடுத்தல், அதிக வேலைகளை பெற்றுக்கொள்ளுதல், துன்புறுத்தல்களுக்கு ஆளாக்கப்படல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களினால் இந்த பெண்கள் பாதிக்கப்பட்டுள்ளமை, விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளதாக அண்மையில் செய்திகள் வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் ஓர் அதிர்ச்சிகரமான செய்தியும் வெளிவந்தது. அதாவது, இலங்கையிலுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பிரதிநிதிகளினாலேயே, குறித்த பெண்கள் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளமையும் கண்டறியப்பட்டுள்ளது. இலங்கைப் பெண்கள் வரிசைகளில் நிறுத்தி வைக்கப்பட்டு, ஓமான் நாட்டு குடிமக்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இதனை பொலிஸ் அத்தியட்சகர் சமரநாயக்க ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தார். மிகக் குறைந்த வயதுடைய பெண்களை 25 லட்சம் இலங்கை ரூபா வரை விற்பனை செய்துள்ளதாக தகவல்கள் கிடைத்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான சூழலில் எமது சமூக தமிழ்ப் பெண்கள் சிக்குண்டு சீர்குலைந்து போவதற்கும் அவர்களை நம்பியுள்ள இளந்தளிர்களின் நிலை கேள்விக்குள்ளாகி இருக்கின்ற நிலைமைக்கும் எம் சமூகம் பொறுப்பு எடுக்க வேண்டும். இந்த சமூகப் பிரச்சனை தொடர்பான, பெண்கள் தொடர்பான விழிப்புணர்வு செயற்பாடுகள், ஒன்றுகூடல்கள், கலந்துரையாடல்கள் மற்றும் வேலைத்திட்டங்கள் சமூகத்தில் நடைபெறுவதில்லை. பெண்களிற்கான சுயதொழில் முக்கியத்துவம் மற்றும் அதற்கான ஏற்பாடுகள், ஒழுங்கமைப்புகள் தொடர்பில் எந்த சமூக தொண்டு நிறுவனங்களும் அதிகம் ஆர்வம் காட்டுவதாக இல்லை. அவர்களுக்கான பிரச்சனைகளை தீர்த்து வைப்பதில் அரச நிறுவனங்களும் அக்கறை எடுப்பதில்லை.

உள்ளூரிலுள்ள கைத்தொழில் நிறுவனங்களும் வறுமை நிலையிலுள்ள பெண்களை உறிஞ்சி இலாபமீட்டுவதில் காட்டும் முன்னெடுப்பை அவர்களுக்குரிய அடிப்படைத் தேவையை பூர்த்தி செய்ய வைப்பதற்கான ஆதாயத்தை வழங்குவதில் ஆர்வம் காட்டுவதில்லை. இதற்கு உதாரணமாக ஆடைத் தொழிற்சாலைத் துறையை குறிப்பிடலாம்.

இவ்வாறான நிலைமைகளை தவிர்க்க பெண்சார் தொழில் முன்னுரிமை உள்நாட்டில் பலப்படுத்தப்பட வேண்டும். பெண்கள் தமக்கு தேவையான பொருளாதாரத்தை ஈட்டக்கூடியதாகவும், உடல் உள சுகாதாரத்தை பேணக்கூடியதாகவும், பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கூடியதாகவும் உள்ள தொழிற் துறைகள் அடையாளப்படுத்தப்பட வேண்டும். அத் தொழிற் துறைகளை வளர்த்தெடுக்க வேண்டிய பொறுப்பு தமிழ் சமூகத்திற்கு உள்ளது. அரசாங்கத்திற்கும் உள்ளது. இந்த பொறுப்பை சமூகத்திற்கும் அரசாங்கதிற்கும் எடுத்துச் சொல்ல கிழக்கில் வாழும் பெண்கள் தம்மை ஓர் அமைப்பாக அணி திரட்டிக் கொள்ள வேண்டும். இந்தப் பெண்களின் பிரச்சனைகளை தீர்க்கச் சொல்லி அரசாங்க கட்டமைப்பிற்கு கடும் அழுத்தங்களை பிரயோகிக்க தமிழ் வெகுசன அமைப்புக்கள் முன்வர வேண்டும்.

# தமிழர் தாயகத்தில் பல முனைகளில் விரிவுபடுத்தப்படும் பௌத்தமயமாக்கல்






அமுது

தமிழர் தாயகத்தில் பௌத்த சிங்கள ஆக்கிரமிப்பு உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது. அதனை அரசாங்க திணைக்களங்களான தொல்லியல் திணைக்களமும் வனவள திணைக்களமும் திட்டமிட்டு முன்னெடுத்து வருகின்றன. தமிழ் மக்களின் தொன்மையான பிரதேசங்களுக்குள் முதலில் தொல்லியல் திணைக்களம் வலுவாக காலூன்றுகிறது. பின் தொல்லியல் சட்டங்களை காரணங்காட்டி அப் பகுதி மக்களை அந்த இடத்துக்கு செல்ல விடாது தடுக்கின்றது. அதன் பின் பலமாக நிறுவனமயப்படுத்தப்பட்ட அரசாங்க கட்டமைப்பு ஊடாக அப்பிரதேசத்தை ஆக்கிரமிப்பு செய்கிறது. இது காலம் காலமாக இலங்கைத்தீவில் இடம்பெற்று வந்தாலும், போர் முடிந்து பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் நிலையிலும் இலங்கை அரசு தமிழர் பிரதேசங்களில் பரவலான பௌத்த ஆக்கிரமிப்பை கட்டவிழ்த்து விட்டுள்ளது.

உலக நாடுகள், சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்டவற்றிடம் வாங்கிய கடனை தமிழர்களை அடக்கி ஒடுக்கவும், தமிழர் நிலங்களை ஆக்கிரமிக்கவும் சிறீலங்கா அரசு பயன்படுத்தி வருகிறது. அதேவேளை, ரணில் அரசு இன்னொரு நோக்கத்தையும் இங்கே நிறைவேற்ற முயற்சித்து வருகிறது. அதாவது, அரசாங்கம் சுமத்தும் பொருளாதார நெருக்கடிகளுக்கு எதிராக தமிழ் சிங்கள மக்கள் இணைந்து போராடுவதற்கான வாய்ப்புகள் ஏற்படுவதை தடுக்கும் பிரித்தாளும் நடவடிக்கையையும் இந்த நில ஆக்கிரமிப்புகளுக்கு ஊடாக எட்ட நினைக்கிறது. நில ஆக்கிரமிப்புகளுக்கு எதிரான தமிழ் மக்களின் வலுவான போராட்டங்களை பௌத்த சிங்களத்துக்கு எதிரான போராட்டங்களாக சித்தரித்து இன விரோதத்தை எரிய விடுகிறது. இவ்வாறாக ஒரே நேரத்தில் தமிழர் தாயகத்தில் நில ஆக்கிரமிப்புகளை செய்யும் அதே நேரம், தன்னால் சுமத்தப்படும் பொருளாதார சுமைகளுக்கு எதிராக போராடாமல் மக்களின் கவனத்தை சிதறடிக்கவும் செய்கிறது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்களின் அடிப்படையாக கோரும் நிரந்தர அரசியல் தீர்வு, இனப்படுகொலைக்கு எதிரான சர்வதேச நீதி என்ற போராட்டங்களிலிருந்து அவர்களின் கவனத்தை திசை திருப்பி அவர்களின் போராட்

டத்தை வெறும் மதச் சின்னங்களை பாதுகாக்கும் போராட்டமாக மாற்றப் பார்க்கிறது. இதனூடாக நில அபகரிப்புக்கு எதிரான போராட்டத்தை மதச்சின்னங்களை காப்பாற்றும் போராட்டமாக சுருக்கி மதவாதத்தை மக்கள் மத்தியில் விதைக்கிறது.

முல்லைத்தீவு மாவட்டம் குருந்தூர் மலையின் உச்சியில் அமைந்துள்ள ஆதிசிவன் ஐயனார் ஆலயத்தில் காலங்காலமாக முன்னெடுக்கப்பட்டு வந்த பொங்கல் உள்ளிட்ட பூர்வீக வழிபாடுகள் அடாவடித்தனமாக நிறுத்தப்பட்டு, சூலம் பிடுங்கி எறியப்பட்டுள்ள நிலையில் நீதிமன்ற தடையுத்தரவையும் மீறி பௌத்த விகாரை கட்டுமானப் பணிகள் முடியும் நிலையில் உள்ளன.

மூதூர் கிழக்கு சூடைக்குடாவில் உள்ள மத்தாளமலை குன்றத்தூர் முருகன் ஆலயம் பௌத்த பிக்குகளால் ஆக்கிரமிக்கப்பட்டு இருக்கிறது. அங்கு தமிழ் மக்கள் வழிபாடுகளில் ஈடுபடுவது தடுக்கப்பட்டுள்ளது.

காலம் காலமாக புனித அந்தோனியார் ஆலயம் மட்டுமே இருந்து வந்த கச்சத்தீவில் ஒரு புத்தர் சிலை இலங்கை கடற்படையினரால் நிறுவப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து நெடுந்தீவு வெடியரசன் கோட்டையை ஆக்கிரமிக்கும் முயற்சி தீவிரமடைந்துள்ளது. கி.மு 200 ஆம் ஆண்டுகளில் யாழ்ப்பாண இராசதானிகளின் கீழ் இருந்த நெடுந்தீவு மற்றும் காரைநகர் பகுதிகளை ஆட்சி செய்த சிற்றரசனே வெடியரச மன்னன். வெடியரசன் கோட்டையின் எச்சங்களை பௌத்த தாது கோபுர எச்சங்களாக சித்தரித்து வரலாறை திரிபுபடுத்தி மாற்றியமைத்து இலங்கையின் தொல்பொருள் திணைக்களம் பௌத்தமயமாக்கல் செயற்பாடுகளை தீவிரமாக முன்னெடுத்து வருகிறது.

தமிழ் மக்கள் செறிந்து வாழும் யாழ்ப்பாணம் நாவற்குழியிலும் தமிழ் மக்களின் எதிர்ப்பை மீறி பௌத்த விகாரை கட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் நிலாவரைப் பகுதியிலும் இராணுவத்தினரால் புத்தர் சிலை வைக்கப்பட்டது. ஆனால் அது தமிழ் மக்களின் எதிர்ப்பால் அகற்றப்பட்டது.

> **இந்த முயற்சி குறிப்பிட்ட சமயத்துக்கு எதிராக நடத்தப்படுவது போல் தோற்றமளித்தாலும் மத வேறுபாடுகளைக் கடந்து ஒட்டுமொத்த தமிழ் மக்களின் இருப்புக்கு வைக்கப்படும் ஆப்பு**

இவையெல்லாம் தமிழ் மக்களின் பண்பாட்டு வாழ்விடங்களையும், கலாசார வழிபாட்டு இடங்களையும், தொன்மை வாய்ந்த இடங்களையும் அழிப்பதற்கான முயற்சிகள். அந்த இடங்களில் பௌத்த விகாரைகளை நிறுவுவதன் மூலம் தமிழ் மக்களின் நிலங்களை அபகரிக்கும் முயற்சி இது. இதனூடாக தமிழ் மக்களின் இருப்பை இலங்கைத்தீவில் இல்லாமல் செய்யும் முயற்சி. திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் இந்த முயற்சி குறிப்பிட்ட சமயத்துக்கு எதிராக நடத்தப்படுவது போல் தோற்றமளித்தாலும் மத வேறுபாடுகளைக் கடந்து ஒட்டு மொத்த தமிழ் மக்களின் இருப்புக்கு வைக்கப்படும் ஆப்பு.

வெடுக்குநாறி மலையில் தமிழ் மக்களின் அடையாள அழிப்பு தொடர்பில் இடம்பெற்ற போராட்டத்தில் பங்கேற்ற பன்னாட்டு குற்றங்கள் நூலின் எழுத்தாளரும், அரசியல் செயற்பாட்டாளருமான இ.நா.சிறீஞானேஸ்வரன் அவர்களிடம் பேசிய போது பின்வருமாறு தெரிவித்தார்.

எமது தொன்மையும் எமது அடையாளமுமாக இருந்த வவுனியா நெடுங்கேணி வெடுக்குநாறி மலையின் ஆதிலிங்கங்களும் மூல மூர்த்திகளும் பிடுங்கி எறியப்பட்ட நிலையில் அதற்காக அழைக்கப்பட்ட போராட்டத்தில் பங்கேற்பதற்காக 30.03.2023 காலை நாங்கள் திருகோணமலையில் இருந்து வவுனியாவிற்கு வருகை தந்திருந்தோம். வவுனியாவில் கந்தசுவாமி கோவிலில் ஆரம்பித்த எங்களுடைய போராட்டம் கந்தசுவாமி கோவிலில் இருந்து மாவட்ட செயலாளரின் அலுவலகம் வரைக்கும் முன்னேறியது. பெருந்தெருக்களின் ஊடாக ‘எங்கள் நிலம் எங்களுக்கு வேண்டும்’, ‘எங்கள் வழிபாட்டு உரிமையை உறுதிப்படுத்து’, ‘எங்கள் வழிபாட்டு உரிமையை நாங்கள் விட்டுக்கொடுக்க மாட்டோம்’, ‘நாங்கள் வெடு

க்குநாறி மலையில் வழிபாட்டு இடத்தை மீள நிறுவுவோம்' என்ற பல்வேறு கோஷங்களை தாங்கியபடி மக்கள் அணி அணியாக கலந்து கொண்டு மாவட்ட செயலாளரின் அலுவலகத்தை நோக்கி நகர்ந்தோம். அங்கு வெடுக்குநாறிமலை ஆலயத்தின் நிர்வாக சபையினரால் முறைப்பாடு கையளிக்கப்பட்டது.

வருகை தந்த மக்களில் பெரும்பாலானவர்கள் மீண்டும் நெடுங்கேணிக்கு பயணித்தோம். எங்களுடைய தொன்மையும் ஆதியும் மிக்க லிங்கம் அடித்து உடைக்கப்பட்ட பிடுங்கி எறியப்பட்ட இடமான வெடுக்குநாறி மலைக்கு பயணம் செய்தோம். அங்கு நாங்கள் வழிபாடுகளை மேற்கொண்டிருந்தோம். நாடாளுமன்ற உறுப்பினர்கள், மதத் தலைவர்கள், வயதானவர்கள், சிறுபராயத்தினர் உட்பட பெருமளவான மக்கள் இன்று அங்கு வருகை தந்து எங்களுடைய வழிபாட்டை மேற்கொண்டார்கள். வெடுக்குநாறி மலையில் எங்களுக்கு இருக்கின்ற உரிமையை நாங்கள் வலியுறுத்துவதற்கான ஒரு மிக நீண்ட பயணமாக இதனை மேற்கொண்டோம். தற்பொழுது அந்த பயணத்தை நிறைவு செய்து வெடுக்குநாறி மலை கோவிலின் பூசாரி அவர்களின் வீட்டில் எங்களுக்கான அமுது மதிய உணவாக இன்று வழங்கப்பட்டது. அதை அருந்தி விட்டு நாங்கள் இப்பொழுது மீளவும் திருகோணமலையை நோக்கி பயணப்பட இருக்கின்றோம்.

உலகளாவிய தமிழர்களிடம் நாங்கள் வேண்டுவது ஒன்று தான். இங்கு நடக்கின்ற இந்த அடக்குமுறைக்கு எதிராக நாங்கள் ஒற்றுமையாக திரண்டெழ வேண்டியவர்களாக இருக்கின்றோம். எங்களுக்குள் ஆயிரம் வேறுபாடுகள் இருந்தாலும் இந்த விடயத்தில் எம் மீது நிகழ்த்தப்படுகின்ற அடக்குமுறை என்ற விடயத்தில் நாங்கள் அனைவரும் ஒன்றித்து செயற்பட வேண்டியவர்களாக இருக்கின்றோம். உங்கள் அனைவரதும் உளமார்ந்த உளப்பூர்வமான பங்களிப்புடனேயே இந்த போராட்டங்கள் வெற்றி அடையும் என்பதை நீங்கள் அனைவரும் விளங்கிக் கொள்ள வேண்டும். எங்களுடைய போராட்டத்திற்கு ஆதரவு தாருங்கள். நாங்கள் மீண்டும் வெடுக்குநாறி மலையில் சிவலிங்கத்துடன் எங்களுடைய தொன்ம லிங்கத்துடன் ஆதி லிங்கத்துடன் உங்களை சந்திப்போம் என்பதை உறுதியாக கூறுகின்றேன்.

2009க்கு பிறகான சூழலில் ஒரு இனப்படுகொலையை சிங்கள அரசு நடத்தி வருகிறது. எங்களுடைய கவசங்களாக, எங்களை பாதுகாத்து நின்ற பாதுகாப்பு படையாகிய, மக்கள் பாதுகாப்பு படையாகிய விடுதலைப்புலிகள் அழிக்கப்பட்ட பின்னர் இந்த இனப்படுகொலை உக்கிரமடைந்து வருகிறது. அவர்களையும் அழித்து அவர்கள் மீது மேற்கொண்ட தாக்குதலும் இனப்படுகொலையின் ஓர் அங்கமாகிய பின்னர் இன்று நாங்கள் ஆதரவற்று அல்லது பாதுகாப்பற்றவர்களாக இருக்கின்றோம். இந்தச் சூழலில் வடக்கு கிழக்கு எங்கும் பௌத்த சிங்கள ஆக்கிரமிப்பானது பெருமெடுப்பில் நிகழ்த்தப்படுகின்றது.

கடந்த பொருளாதார நெருக்கடி காலத்தில் அந்த ஆக்கிரமிப்பை தற்காலிகமாக நிறுத்தி தமிழ் மக்களுடன் ஒன்றித்து போராட்டங்களை செய்து உலக நாடுகளின் கடன்களை பெற்றுக் கொள்ளும் வரை வாழாதிருந்த பௌத்த சிங்கள பேரினவாதம் இன்று தன்னுடைய முகத்தை மிகத் தெளிவாக வெளிக்காட்டி இருக்கின்றது. வடக்கு கிழக்கு எங்கும் உடனடியாகவே பெருமெடுப்பில் பௌத்த பேரினவாத தாக்குதல்களை நாங்கள் எதிர்கொண்டிருக்கின்றோம். உண்மையில் ஓர் இடத்தில் நடக்கின்ற தாக்குதலை நாங்கள் எதிர்கொள்ள தயாராகும் பொழுது மற்றொரு இடத்தில் தாக்குதல் நடத்தப்படுகின்றது. பரவலான இந்த தாக்குதலை எதிர்கொள்வதற்கு உலகளாவிய ரீதியில் உள்ள தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டியது காலத்தின் தேவையாக இருக்கின்றது. உங்களுடைய நாடுகளில் இருக்கின்ற தூதரகங்களின் முன்னால் நீங்கள் எங்களுடைய இருப்பை, எங்களுடைய பாதுகாப்பை, எங்களுடைய தொன்ம அடையாளங்களை பாதுகாப்பதற்கான போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும். அதற்கான நிபுணத்துவ தந்திரோபாய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று நான் உங்களை கேட்டுக்கொள்கின்றேன்.

(24ஆம் பக்க தொடர்ச்சி)



கிராமங்களின் மீது பொழிய விட்டு அந்த கிராமங்களை அழித்து மத்திய மலை நாட்டில் பெருந்தோட்ட பயிர்ச்செய்கையை உருவாக் கினார்கள்.

அந்தக் கிராமத்தில் பல ஆயிரம் வருடங் களாக தலைமுறை தலைமுறையாக வாழ்ந்த அந்த மக்களின் வாழ்வியலை வாழ்வாதார த்தை ஒட்டு மொத்தமாக சிதைத்து அந்த மக்களை பட்டினி சாவிற்கு கொண்டு சென் றார்கள். நிர்க்கதியாக்கினார்கள். இடம் பெயர் த்தார்கள். தங்கள் வாகனங்களில் ஏற்றி நடுக்காடுகளில் கொண்டு போய் விட்டார்கள். அன்றைய காலகட்டங்களில் கண்டிய சிங்கள மக்கள் அனுபவித்த துயரம் மகா துயரம்.

அந்த சிங்கள மக்கள் நிமிர்ந்து பார்க்கும் பொழுது அவர்கள் கண்களுக்கு தெரிந்தது ஆங்கிலேயரை விட ஆங்கிலேயரால் கூலிக்கு அமர்த்தப்பட்ட மலையக தமிழ் மக்கள் தான். தமிழர்கள் தான் அவர்கள் கண்ணுக்கு தெரிந் தவர்கள். தங்களது வாழ்வியலை எதிர்க்க வந்த தங்களுடைய நிலங்களை ஆக்கிரமித்து தங்களை துரத்தி விட்டு குடியமர வந்த ஆட்க ளாகவே அவர்களை பார்த்தார்கள். அது ஒரு புறம் இருக்கட்டும்.

மலையகத்திற்கு கொண்டு வரப்பட்ட இந்த தமிழ் கூலித் தொழிலாளர்களால் தான் பெருந்தோட்டத் துறை செழித்து வளர்ந்தது. பெருந்தோட்டத் துறை செழித்து வளரத் தொட ங்கிய போது அந்த பெருந்தோட்டத் துறை உற்பத்திகளை கப்பலில் ஏற்றி தங்கள் நாடு களுக்கு கொண்டு போவதற்காக அவர்கள் கொழும்பிற்கும் கண்டிக்கும் மத்திய மலை நாட்டிற்கும் இடையில் பாதைகளை அமைத் தார்கள். இரும்பு பாதைகளை அமைத்தார்கள். கற்பாதைகளை அமைத்தார்கள். கொழும்பில் துறைமுகங்களை விருத்தி செய்தார்கள். இந்த தீவின் பொருளாதாரத்தை கொள்ளையடித்துக் கொண்டு போனார்கள்.

ஏதோ ஒரு வகையில் இந்த பெருந்தோட்ட பொருளாதாரம் என்பது இலங்கையில் ஒரு செழுமை மிக்க பொருளாதாரத் துறையாக மாற்றி அமைக்கப்பட்டது. கூலி உழைப்பாளர்களாக வந்தவர்களுக்கு போதிய கூலியும் வசதியும் கிடைத்ததோ இல்லையோ இலங்கைக்கு மிகப் பெரிய பொருளாதார ஆதாயம் கிடைத்தது. பிரித்தானியர் காலத்தில் அந்த ஆதாயங்கள் எல்லாமே பிரித்தானியாவிற்கு போயின.

ஆனால் இலங்கை சுதந்திர நாடு என்ற பெயரில் சுதேசிகளின் ஆட்சியின் கீழ் வந்த காலக்கட்டங்களில் இலங்கையின் ஒட்டுமொத்த பொருளாதாரத்தில் 40 வீதமான பொருளாதாரம் இந்த பெருந்தோட்டங்களால் பங்களிப்பு செய் யப்பட்டது. பொருளாதாரத்தில் மிகப்பெரிய பங்கு அது. அந்த காலக்கட்டங்களில் தான் மலேசியாவில் இருந்து தனியாக பிரிந்து சென்ற சிங்கப்பூரின் தலைவரான லீகுவான்யூ இங்கு வந்தார். “என்னுடைய கனவு சிங்கப்பூரை ஒரு கொழும்பு போன்று மாற்றியமைக்க வேண்டும் என்பதே” என்று அவர் சொன்னார். அந்தளவிற்கு கொழும்பு தலைநகரமும் இலங்கையின் பொருளாதாரமும் ஒரு உயர்ந்த இடத்தில் இருந்தன.

நாங்கள் என்ன செய்தோம்? பிரித்தானியர் போகும் பொழுது எங்களிடம் தந்துவிட்டுப் போன அந்த பெருந்தோட்டத் துறையை தக்க வைத்தோமா என்றால் இல்லை. அந்த பெருந் தோட்டத்துறையை தக்க வைத்து அதனை இந்த தேசத்தின் பொருளாதாரத்தை வலிமையாக்கும் விடயமாக பார்ப்பதற்கு பதிலாக நாங்கள் இனக் குரோதம் கொண்டவர்களாக மாறி இருந்தோம். நாட்டின் அன்றைய அரசியல் தலைவர்கள் எல் லோரும் இனக்குரோதம் கொண்டவர்களாக எல் லாவற்றையும் பார்த்தார்கள். ஒரு பெரிய பெருந் தோட்டப் பொருளாதாரத்தை கட்டமைத்து தாங்கி கொண்டிருந்த அந்தப் பெரிய சமூக த்தை, ஒரு உழைப்பாளிகள் சமூகத்தை மிகப் பெரிய பங்காளிகளாகப் பார்க்காமல், அந்நியர் களாக துரத்தப்பட வேண்டியவர்களாக பார்த்தார் கள். எனவே அவர்கள் முதலாவதாக செய்தது

இந்த மலையகத்தில் வந்து இருந்த கூலித் தொழிலாளிகளை நாடற்றவர்கள் ஆக்கியது.

மக்கள் பிரதிநிதிகள் சபைக்கு வாக்களிக்கும் உரிமை அவர்களுக்கும் கிடைத்த பொழுது அவர்களது பிரதிநிதித்துவம் 8 அல்லது 9 ஆக இருந்தது. அது சிங்களவர்களுக்கு மிகப் பெரிய ஆழமான தாக்கத்தை கொடுத்தது. அதனை இல்லாமல் செய்ய வேண்டும் என்று நினைத்தார்கள். இந்த உழைப்பாளிகள் பொருளாதாரத்திற்கு பெரும் பங்களித்தது என்கிற விடயங்களை எல்லாம் மறந்துவிட்டு இவர்களை நாட்டை விட்டு துரத்த வேண்டும் என்று தீர்மானம் இயற்றினார்கள். இன ரீதியான வெறி மட்டும் தான் அங்கு இருந்தது. கண்டியர்களுடைய நிலங்களை எல்லாம் இவர்கள் பிரித்தானியர்களின் துணையுடன் கையகப்படுத்தி இருக்கின்றார்கள் என்று சொன்னார்கள்.

இவர்களுக்கு மத்திய மலை நாட்டில் ஒரு துண்டு நிலம் கூட உரிமையாகக் கூடாது என்றார்கள். கண்டிய நிலம் மீண்டும் கண்டிய மக்களுக்கே சொந்தம் என்று சொல்லிக் கொண்டு இவர்களை எவ்வாறு தேசத்தில் இருந்து அந்நியப்படுத்தலாம் என்று யோசித்தார்கள். இவர்களுடைய வாக்குரிமையை ஒட்டுமொத்தமாகப் பறித்தார்கள். பிராஜாவுரிமை சட்டத்தை கொண்டு வந்து இவர்களை நாடற்றவர்களாக்கினார்கள். ஒரு தேசத்தின் 40 வீதமான பொருளாதாரத்தை கட்டமைத்து பராமரித்து கொண்டிருந்த மிகப்பெரிய தொழிலாளர் படையை நிர்க்கதியாக்கி அவர்களில் பாதிப் பேரை தேசத்திற்கு வெளியே அகற்றிய மிகப் பெரிய முட்டாள்தனம் இந்த உலகத்தில் வேறு எங்கும் நடந்திருக்க முடியாது.

நான் முன்பு ஒருமுறையும் பேசி இருந்தேன், இந்த ஏழை மக்களின் கண்ணீரால் கட்டப்பட்டது தான் இலங்கையினுடைய பொருளாதாரம் என்று. அதுதான் உண்மை. அவ்வாறு 40 வீதமான பொருளாதாரத்தை தாங்கி வைத்திருந்த அந்த பெருந்தோட்டத் துறையை சீரழிக்கும் போது இவர்களுக்கு இலங்கை தேசம், இலங்கை நாடு என்கின்ற ஒரு பரந்த பார்வையே இருக்கவில்லை. அவர்களுக்கு இந்த சிங்கள தேசியவாதம் என்கின்ற அந்த குறுகியவாதமும், அந்த மக்கள் தமிழர்கள் ஆகவே அவர்களை திருப்பி அனுப்ப வேண்டும் என்கிற ஆவேசமும் மட்டும் தான் இருந்தது. அவர்களுக்கு நாடு என்கிற பார்வை இருக்கவே இல்லை.

> **இவர்களுடைய வாக்குரிமையை ஒட்டுமொத்தமாகப் பறித்தார்கள். பிராஜாவுரிமை சட்டத்தை கொண்டு வந்து இவர்களை நாடற்றவர்களாக்கினார்கள்**

இந்த தீவில் வாழ்ந்த அத்தனை பேரும் இந்த நாட்டின் குடிமக்களாக எந்தக் காலக் கட்டங்களிலும் அவர்கள் கருதியது கிடையாது. 1930, 1940 களில் இலங்கையினுடைய சனத்தொகை புள்ளி விபரங்களை எடுக்கும் போது வடக்கு கிழக்கில் வாழ்ந்த ஈழத் தமிழர்கள் என்று சொல்லுகின்ற தமிழர்களை விட எண்ணிக்கையில் சிறிது அதிகளவு கொண்டதாக தான் அந்த மலையகத்தில் வாழ்ந்த பெருந்தோட்டத் துறையில் இருந்த தமிழ் மக்கள் இருந்தார்கள்.

அன்றைய பெருந்தோட்டத் துறையில் இருந்த தமிழ் மக்களின் குடியுரிமையை இல்லாமல் செய்வதற்கு துணை போன எங்களுடைய தலைவர்களுடைய சிந்தனைக்கு பின்னாலும் இந்த மக்களின் பெரும்பான்மை ஒரு பயமாக அமைந்திருந்ததோ என்றொரு கேள்வியும் என்னுடைய மனதில் இருக்கின்றது. சிலவேளைகளில் அவர்கள் தொடர்ந்து குடியுரிமையுடன் இருந்தார்கள் என்று சொன்னால், வடக்கு கிழக்கில் இருக்கின்ற ஈழத் தமிழர்களை விட எண்ணிக்கை பெரும்பான்மையானவர்களாகவும் அதிக ஆசனங்களை பாராளுமன்றத்தில் தக்க வைக்க கூடியவர்களாகவும் இருப்பார்கள். இதனால் அவர்கள் பலம் பொருந்தியவர்களாக மாறிவிடுவார்களோ என்கின்ற அச்சம் காரணமாக நாங்கள் அவர்களுடைய வாக்குரிமைப் பறிப்பிற்கு ஆதரவாக நின்றோமா என்கிற கேள்வி கூட என்னுடைய மனதில் இருக்கின்றது.

# இலங்கைத்தீவில் மலையக தமிழர்களின் 200 ஆண்டுகள்



செல்வின்

சுய பொருளாதாரத்தைக் கொண்டிருந்த ஒரு தீவு ஐரோப்பியரின் கையில் குறிப்பாக பிரித்தானியரின் கையில் அகப்பட்ட பொழுது தங்களுக்கு தேவையான பொருளை இங்கு உற்பத்தி செய்யலாம் என்பதை அவர்கள் கண்டறிந்தார்கள். அதன் விளைவுதான் இந்த தேயிலை, பின்பு இறப்பர், கொக்கோ போன்ற பொருட்கள். இவற்றை இங்கு உற்பத்தி செய்து, விற்பனை செய்து தங்கள் நாட்டிற்கு செல்வம் கொழிக்க வைக்கலாம் என்ற ஒரு நோக்கத்தை அவர்கள் கொண்டிருந்தார்கள். மத்திய மலைநாட்டு காலநிலையும் அந்த தரை அமைப்பும் அதற்கு மிகவும் சாதகமானவையாக இருந்தன.

மத்திய மலை நாட்டில் கண்டிய இராச்சியத்தில் பௌத்த மதத்தை பின்பற்றிக் கொண்டு சிங்கள மொழி பேசிக்கொண்டு, மிகவும் அமைதியாக வாழ்ந்து கொண்டு இருந்த அந்த கிராமிய மக்கள் மீது பிரித்தானியரின் கண்கள் பட்டன. அந்த மத்திய மலை நாட்டை கையகப்படுத்தினார்கள். அதில் தங்களுடைய தேயிலையையும் கோப்பியையும் விளைவிக்க வேண்டுமென்று நடவடிக்கை எடுத்தார்கள். அங்கு வாழ்ந்த சிங்கள மக்கள் அதற்கு உடன்படவில்லை. தங்கள் நிலங்களை கொடுக்க அவர்கள் தயாராக இருக்கவில்லை. தங்களுடைய உழைப்பையும் கொடுக்க தயாராக இருக்கவில்லை. பிரித்தானியருக்கு கை கட்டி சேவகம் செய்யவும் தயாராக இருக்கவில்லை. மிகவும் தன்மானமிக்க ஒரு சமூகமாக இருந்தார்கள்.

பிரித்தானியருக்கு வேறு தெரிவு இருக்கவில்லை. இந்தியாவின் தமிழ்நாட்டில் வறுமையாலும், வறட்சியாலும், வேலையின்மையாலும், சமூக சுரண்டல்களாலும் பாதிக்கப்பட்டு கொண்டிருந்த கிராமங்களில் இருந்த மக்களை அணுகினார்கள். அவர்களை ஒரு மக்கள் கூட்டமாக பார்க்காமல் உழைக்கும் மிருகங்களாகவே பார்த்தார்கள். தங்களுக்கு தரகு முதலாளித்துவம் செய்ய வந்த கங்காணிமாரைக் கொண்டு அந்த மக்களை ஏமாற்றி, பாலும் தேனும் பெருகி வரும் தேசத்திற்கு உங்களை அழைத்து செல்கின்றோம் என்று பொய்யான வாக்குறுதிகளை கொடுத்து, அவர்களை கப்பல்களில் ஏற்றி இங்கே கொண்டு வந்தார்கள். மன்னாரில் இறக்கி, மன்னாரில் இருந்து மலையகம் வரை நடத்தி கொண்டு சென்றார்கள். அவர்களுக்கு லயங்கள் என்று சொல்லுகின்ற நீண்ட மண்டபங்களை குடியிருப்பாக கட்டிக் கொடுத்தார்கள். மத்திய மலை நாட்டின் காடுகளை எல்லாம் வெட்டி சரித்து, கீழே உள்ள

(22 ஆம் பக்கம் பார்க்கவும்)

இந்த இதழானது தமிழ் ஊடகத் திரட்டு நிறுவனத்தினரால் 20.04.2023 அன்று வெளியிடப்பட்டது.